<6jada><Social Sciences><Astrology><1981><Book><புகழ் பெற்றவர்களின் ஜாதகங்கள்><*****><57><

-5-

## ஹென்றி ஃபோர்டு

### பிறவிக் குறிப்புகள்

மோட்டார்க் கார் தயாரிப்பாளராகவும் மாபெரும் தொழிலதிபராகவும் விளங்கிய, உலகப் புகழ்பெற்ற ஹென்றி போர்டு அவர்கள், 1863-ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிற்பகல் 2 மணிக்குப் பிறந்தார்.

### சிறப்பு அமிசங்கள்

இவரது ஜென்மலக்கினம் விருச்சிகம், கடல் லக்கினம், இலக்கினத்திலேயே இராகு வீற்றிருப்பதோடு செவ்வாய், சனி ஆகிய கிரகங்களால் பார்வையிடப்பெறுகிறது. மூன்று முக்கியமான தீய கிரகங்கள் இலக்கினத்தைப் பார்வையிட்ட போதிலும் இலக்கின, கேந்திரங்களுக்கு உரியவர்களான செவ்வாயும் சனியும் தற்காலிகச் சாதகர்களாகவே உள்ளனர். இராகு சனியால் பார்க்கப்பெற்றாலும்கூட இரண்டு கிரகங்களுமே தமது காரகத்துவத்திற்குரிய பலன்களில் ஒற்றுமையாக இணையக்கூடியவையாகும். இலக்கினத்தில் அமர்ந்துள்ள

இராகு, ஹென்றி போர்டு அவர்களை ஆழ்ந்த
சிந்தனையாளராகவும் வலிமை வாய்ந்த ஒழுக்க
சீலமுடையவராகவும்
இலங்கச் செய்தது இலக்கினாதிபதி, நவாம்சத்தில்
நல்ல
நிலையிலிருந்தாலும் சனியின் பார்வை பெற்றுள்ளார்.
சந்திராலக்கினாதிபதியான சந்திரன் மிகவும்
வலிமையுடையவராகவும் ஜாதக
ஜென்மலக்கினத்திற்குரிய
பாக்கியாதிபதியின் பலத்துடனும் திகழ்கிறார். சனியும்
சுக்கிரனும்
குருவும் இலக்கினத்திற்கு இலாப வீட்டில்
அமர்ந்துள்ளனர்.
விருச்சிக இராசியினை இலக்கினமாகக்கொண்டு
பிறந்தவர்கள் மிகவும் தைரியமும் துணிச்சலும்
உடையவர்களாயும்
திடசித்தமுடையவர்களாயும் இருப்பார்கள்.
இலக்கினத்தில்
அமர்ந்துள்ள இராகுவினால், போர்டுக்குத்
தீர்க்கதரிசன
ஞானமும் எதிர்காலத்திற்காகத் திட்டமிடும் சக்தியும்
உண்டாயின. விருச்சிகம், இரகசியங்களுக்கும்
புதையலுக்கும்
மர்மங்களுக்கும் உரிய வீடாகையால் அங்கமர்ந்த
இராகுவினால், அவருக்கு விஷயங்களின்
இரகசியங்களைப்பற்றி
அறிந்துகொள்ளும் ஞானமும் அறிவுநுட்பமும்

உண்டாயின.
செவ்வாய், பொறியியலுக்குரிய கிரகம்; சனி, தொழில் நுட்பம், உழைப்புக்குரிய கிரகம், சனி பார்வை பெற்ற இலக்கினமாகையால், அது ஹென்றியை இளமையிலிருந்தே தாம் பெரியதொரு பொறியியல் நிபுணராகவும் தொழிற்சாலை அதிபதியாகவும் ஆகவேண்டும் என்னும் எண்ணத்தை அவர் நெஞ்சில் ஊன்றி வளரச்செய்திருக்கிறது. இராகு, செவ்வாய், சனி ஆகிய கிரகங்களின் தீட்சண்யத்தினால் போர்டின் கற்பனைவளமிக்க சிந்தனை அவரது தொழில் துறையின் மேன்மைக்குரிய எண்ணமாக வளரலாயிற்று. மகர வீட்டிலுள்ள சந்திரன், சுதந்தரமான சிந்தனையையும் செயலையும் சலியாத உழைப்பையும் வழங்கியதால், அவர் நெஞ்சுரமும் துணிவும் தந்நம்பிக்கையும் மிக்கவராய்த் திகழ்ந்தார்.
இலக்கினத்திற்கு 6, 8, 12 ஆவது ஸ்தானங்கள் எதிலும் நல்ல கிரகமோ தீய கிரகமோ இல்லை. அதனால் அவர் உரோகம், ருணம் (கடன்), விரையம் (நஷ்டம்) ஆகிய எந்தத்

தீமையும் இல்லாமலேயே முன்னேற முடிந்தது. ஜாதகத்தில்
ஸங்கயோகம் அமைந்துள்ளதால், அந்த யோகம் தார்மிக
சிந்தனையையும் அறங்காக்கும் கருணையையும் தீர்க்காயுளையும்
வழங்கியது. 4-ஆவது ஸ்தானம் நிலபுலன்கள், ஸ்திரமான
சொத்துகளுக்கு ஆதார ஸ்தானமாகையால் அதுவுங்கூட
பாக்கியவசத்தால் வளமையாக அமைந்தது. சுக்கிரன்
நீசபங்கத்திலிருந்ததாலும் 4-க்குரிய சனீஸ்வரன் இலாப
வீட்டிலிருந்ததாலுமே சனி மஹா தசையிலிருந்துதான் போர்டு
செல்வ வளமையும் செல்வாக்குப் பெருமையும் மதிப்பும்
மரியாதையுமுடையவராக விளங்கினார். ஜீவன
ஸ்தானத்துக்குரிய சூரியன் பாக்கியத்தாலும், அந்த வீடு சந்திரனின்
பார்வையைப்பெற்றதாலும் அவர் செழுமையான ஸ்திரமான
ஐசுவரியச் செல்வங்களைப் பெற்றார். இத்தகைய அமைப்பே,
அரசியலில் அவர் செல்வாக்குப் பெறக் காரணமாகும்.
ஏனென்றால், சூரியன் அரசியலையும் அரசாங்கத்தையும்

கர்மத்தையும் ஆத்மாவையும் குறிக்கும் கிரகம்.
சந்திரனைத் தவிர
இராகு கேதுக்கள் இலக்கினத்திலும் நவாம்சத்திலும் 9-ஆவது,
10-ஆவது, 11-ஆவது வீடுகளில் அமர்ந்துள்ளதும் ஜோதிட
ரீதியில் மிகவும் முக்கியத்துவமுடையதாகும். இலக்கினாதிபதி
10-லும், 10-ஆவது ஸ்தானாதிபதி 9-ஆவது வீட்டிலும், 2-ஆவது
ஸ்தானாதிபதி, 7-ஆவது ஸ்தானாதிபதிகள் 11-ஆவது வீட்டிலும்
அமர்ந்திருப்பது எவ்வகையில் செல்வ நிலையின் கவர்ச்சி ஈர்ப்பு
மைய நிலை அமைந்துள்ளது என்பதைக் குறிக்கிறது.
எல்லாவற்றையும்விட ஹென்றி போர்டை ஒரு கோடீஸ்வரராகச்
செய்வதற்கு அவரது ஜாதகத்தில் அமைந்திருந்த கிரகங்களுக்கு இடையே ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் இருக்கும்
தொடர்புகள், ஜோதிடர்களுக்கு வியப்பை அளிக்கின்றன.
இத்தகைய தொடர்புகள் அவரது ஐசுவரியச் செழுமைக்கு
எப்படிச் சாதகமாக அமைந்தன என்பதைக் கவனிப்போம்.

செல்வக் கொழிப்பிற்குக் குருவும்; நிலபுலங்கள்,
தொழிற்சாலை, தொழிலாளர்கள் ஆகியவற்றுக்குச்

சனியும்;
பொறியியல் நுட்பம், தொழிற்சாலை வளர்ச்சி -
முன்னேற்றம்
-9-
ஆகியவற்றிற்குச் செவ்வாயும் காரணம். சந்திர,
சூரியர்களால்
அமைந்த அரசியல் செல்வாக்குகளுடன்,
இவையெல்லாமே
சுக்கிரனின் நீசபங்க ராஜயோகத்தினால்
உறுதிப்படுவதையும்
இத்தகைய கிரக அமைப்பு நிலைகளிலிருந்து
அறியலாம்.
பித்ருகாரனாகிய சூரியன் 9-ஆவது வீட்டில்
இருப்பதால் அவருக்கும்
அவர் தந்தைக்கும் இடையே மகிழ்ச்சியான
உறவுநிலை
இருக்கவில்லை. ஹென்றி போர்டு, இயந்திரத்தொழில்
நுட்பத்தில் ஆர்வமும் மனநாட்டமும்
கொண்டிருந்ததை அவர்
தந்தை விரும்பவில்லை. ஹென்றி போர்டின்
தீர்க்காயுளுக்கு
ஆதாரம் 3-ஆவது 8-ஆவது வீட்டதிபதிகளின்
நிலைமைகளே
ஆகும்.
ஹென்றி போர்டு, தம் சுய சரிதத் தில், தம் பள்ளிப்
படிப்பைத் தமது 17-ஆவது வயதிலேயே
விட்டுவிட்டுத்
தொழிற்பயிற்சி பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார். இது

நிகழ்ந்தது இராகு தசையில். இராகு, செவ்வாயின் வீட்டிலமர்ந்துள்ளார். நெருப்பு, இரசாயனம், தொழிற்சாலை
ஆகியவற்றுக்குரிய கிரகம், செவ்வாய், அவர் திருமணம், அவருக்கு
இராகு தசை சந்திர புத்தியில், குரு, விருச்சிகத்தைக் கோச்சாரத்தில் கடந்தபோது நிகழ்ந்தது. இராகு இலக்கினத்திலிருந்து 7-ஆம் வீட்டைப் பார்க்க சந்திரனுக்கு
9-ஆவது வீட்டில் குருவும் களத்திரகாரகனான சுக்கிரனும்
சேர்க்கை பெற்றிருந்ததால, 11-ஆவது வீட்டிற்குப் பெயர்ச்சி ஏற்பட்டபோது அவருக்கு திருமணம் நிகழ்ந்தது.
நவாம்சத்தில் புத்திரகாரகனாகிய சந்திரன், 7-ஆம் வீட்டை
நோக்குவதும் குறிப்பிடத்தக்கது.

1892-ஆம் ஆண்டில் ஹென்றி போர்டு, தமது முதலாவது
மோட்டார் காரை உற்பத்தி செய்து முடித்தபோது அவரது ஜாதகத்தில் அப்போதுதான் குரு தசை தொடங்கியிருந்தது. ஆகவே, அவ்வாண்டு அவரது செழுமையான
வருங்காலத்திற்கு ஆரம்ப நிலையாய் இருந்தது. குருவே அவரது
ஜாதகத்தில் தனயோகத்தை அளிப்பவராய் அமைந்திருந்தார்.
1902-ஆம் ஆண்டிலிருந்து குரு சந்திரனுடைய

புத்தியில்
இருந்தபோதுதான் ஹென்றி போர்டு தமது
மோட்டார்த்

தயாரிப்பில், புதிய தொழில் நுட்பங்களை
அராய்ந்தறிந்து
நான்கு சிலிண்டர்மோட்டாரை அமைக்க
முயன்றுகொண்டிருந்தார். குருதசை செவ்வாய்
புத்தியில், குரு மங்கள
யோகம் காரணமாக, அவர் தமது மகத்தான
சாதனையாக
போர்டு மோட்டார் கம்பெனியைத் தொடங்கினார்.
மாருத
யோகத்தின் விளைவாக அவரது தொழில்
மேலோங்கியது. சனி
தசையிலிருந்து அவரது வியாபாரம் ஒழுங்கான
முறையில்
அபிவிருத்தியடைந்தது. புதன் தசையில்தான்
மோட்டார்த்
தொழிலும் வளர்ந்து, உற்பத்தியும் விற்பனையும்
பெருகின.
சுக்கிர புத்தியில், ஹென்றி போர்டு மிகப்பெரிய
தொழிற்சாலையை டாகென்ஹாமில் கட்ட
ஆரம்பித்தார்.

ஜோதிடத்துறையில் உள்ளவர்களுக்கும் ஜோதிட
சாஸ்திர விஞ்ஞானத்தைப் பயில்வோருக்கும்
ஹென்றி
போர்டின் ஜாதகம், தொழில்துறை முன்னேற்றம்,

தொழிற்சாலை அமைப்பு, அபிவிருத்தி, செல்வ நிலை செழிப்பு,
கொழிப்பு ஆகியவற்றிற்கு ஓர் எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது.

உலகிலேயே மிகவும் புகழ்பெற்ற ஹென்றி போர்டு ஒரு
பெரிய தொழிலதிபர்; பொறியியல் நிபுணர்; மோட்டார்க்
கார்களை உற்பத்திசெய்யும் துறையில் உலகிலேயே மிகவும்
முக்கியமானவராகத் திகழ்ந்ததோடு, உலகத்தின் மிகப்
பெருஞ் செல்வந்தர்களுள் கோடீஸ்வரர்களுள்
ஒருவராகத் திகழ்ந்தார். அவரது ஜாதகத்தில் அமைந்துள்ள
கிரக வலிமைதான் அவரது உயர்வுக்கும் செல்வ
ஐசுவரியங்களுக்கும் தொழில்துறை மகோன்னத வளர்ச்சிக்கும்
ஆதாரமாய் இருந்துள்ளது.

அவரது பெருஞ்செல்வச் செழிப்புக்கு அவரது
ஜாதகத்திலுள்ள முக்கிய அமிசங்கள் குறிப்பிடத்தக்கன.

மாருத யோகம்: குரு திரிகோண நிலையில்
சுக்கிரனிலிருந்து அமைந்ததும், குருவிலிருந்து 5-ல் சந்திரனும்,
சந்திரனிலிருந்து சூரியன் கேந்திர ஸ்தானத்திலும்
அமைந்ததுமேயாகும்.



கடகத்தில் அமைந்த புதனும், 11-இல் அமர்ந்த

சனியும்
மோட்டார்த் தொழில் வியாபார முன்னேற்றத்துக்கு
ஆதாரமாயின.
இரண்டாம் வீட்டிற்கதிபதி 11-ஆம் வீட்டில்
அமர்ந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.
ஹென்றி போர்டு, சுய சிந்தனையாளர்,
கண்டுபிடிப்பாளர். இதனை மகர வீட்டில் உள்ள
சந்திரனும் அந்த வீடு
குருவால் பார்க்கப்பெறுவதும், சரராசியாக அந்த வீடு
அமைந்ததும் அறிவிக்கின்றன. 11-ஆவது வீடு
இலாப ஸ்தானமாகவும்
அதற்கு ஏற்ப 10-ஆவது ஜீவன ஸ்தானம்
சிறப்பாகவும்
அமைந்துள்ளன. பாக்கிய வீடான 9-ஆவது வீடு
அதிர்ஷ்டத்தைக் குறிப்பதாகும். புதன்,
வர்த்தகத்துறைக்குரிய
கிரகமாகும். பத்தாம் வீட்டுக்கு அதிபதியான
சூரியனும் புதனும்
9-ஆவது வீட்டில் அமர்ந்தது. அவரின்
அதிர்ஷ்டத்திற்கும்
அரசாங்கச் சலுகைகள் கிட்டுவதற்கும்
காரணமாகின்றது.
இலக்கினாதிபதியான செவ்வாய் 10-இல் அமர்ந்ததால்
அவர்
மாபெரும் தொழிற்சாலைகளையும், எரிவாயுக்கள்,
பொறியியல்,
எஃகு, இரும்பு சம்பந்தப்பட்ட ஆய்வுச்
சாலைகளையும்

தொடங்கினார் 11-ஆவது வீட்டில் அமர்ந்த
சனிபகவான், சுரங்கங்கள்
இரும்பு, தொழிலாளர்கள் போன்றவைகளுடன் அவர்
கொண்டிருந்த தொடர்பை உறுதிப்படுத்துகிறார். குரு,
செல்வச் செழிப்புக்கும் ஆதாரமானவர். அவர் 11-
ஆவது
வீட்டிலமர்ந்து மதிப்பையும் மகத்தான
செல்வத்தையும்
வழங்கினார். மோட்டார் என்பது வாகனமாகும்.
சுக்கிரன்
வாகனகாரகனாகும்; இத்தகைய சுக்கிரன்,
தனகாரகனாகிய
குருவுடன் இலாப வீடாகிய 11-ஆம் வீட்டில்
அமர்ந்திருந்ததால்தான், அவை, மோட்டார் உற்பத்தி
தாரிப்புத்
தொழிலிலும் வியாபாரத்திலும் இலாபத்தைத் தேடித்
தந்தன. சூரியனும் சந்திரனும் சரராசிகளில் சஞ்சரித்த
காலத்தில் ஹென்றி போர்டு பிறந்தவராகையால்,
அவர் தம்
வாழ்நாள் முழுதும் சுறுசுறுப்பாகச் செயலாற்றிக் கர்ம
வீரராக விளங்கினார். ஹென்றி போர்டு எந்தச்
செயலையும்

உடனுக்குடன் முடித்துவிட வேண்டும் என்பதில்
ஆர்வமிக்கவராய் இருந்தார். சிறிது கால
தாமதமாவதும் அவருக்கு
வெறுப்பை அளித்தது. அரசிடமிருந்து பணம்
பெறுவதில்

ஆகும் காலதாமதத்தால் தம் தொழில்துறை பாதிக்கும்
என்பதில் அவர் மிகவும் விழிப்பாய்
இருந்திருக்கிறார்.
 தேர்ந்த சிந்தனையின் அடிப்படையில் எழுந்த
திட்டங்களுக்கு ஏற்பச் செயல், உழைப்பு ஆகியவை
அமையவேண்டும்
என்பதில் உறுதியாய் இருந்தார். சுக்கிரன் 12-ஆவது
வீட்டிற்கு அதிபதியாய் இருந்ததால், ஏதோ பணம்
சம்பாதிக்கும் துறையாக அவர் வியாபாரத்தை
மதிக்கவில்லை.
இருப்பினும் அவர் ஒரு கோடீஸ்வரரானது
வியாபாரத்தினால்தான்.
ஹென்றி போர்டினிடத்தில் பொறுமைக்குணம் ஒரு
போதும்
இருந்ததில்லை. பொதுவாக, ஒரே துறையில்
வியாபாரஞ்
செய்யும் வியாபாரிகளுக்கிடையே போட்டியும்
பொறாமையும்
இருப்பது பொது இயல்பு. இதனைக் குரு, சுக்கிர
சேர்க்கையும்
11-இல் அமர்ந்த சனியும் அறிவிக்கின்றன. குரு,
சூரியன், சனி
ஆகிய கிரகங்களின் வளமையால்தான் அவர் ஒரு
மாபெரும்
முதலாளியானார். இருப்பினும் அவர் தமது நிறுவனத்
தொழிலாளர்களின் நலன்களில் மிகவும்
அக்கறைகொண்டிருந்தார். தந்நம்பிக்கை
மிகுந்தவராயும்

மனிதாபிமானமுள்ளவராயும் மிகச்சிறந்த
கொள்கைகளைக் கொண்டவராயும்
விளங்கிய ஹென்றி போர்டு, கோடீஸ்வரர்களுள்ளே
ஒரு
குணசீலராக விளங்கினார். அவர் எழுதிய
`வாழ்க்கையும்
தொழிலும்' என்னும் நூலில், "இலாபத்திற்கு
உழைப்பும்
தொண்டுமே முக்கியமானவை. இவற்றைக்கொண்ட
வியாபாரம்தான் உலகத்தைச் சிறப்புடன் நிலைக்க
செய்கின்றன. அத்தகைய வியாபாரம்தான் ஒரு
புனிதத்
தொழிலாகும்" என்று குறிப்பிட்டுள்ளார். இத்தகைய
மனமும் சிந்தனையும் அமைவதற்குக் காரணம்,
அவரது
ஜாதகத்தில் குரு பகவான் வர்க்கோத்தம நிலையில்
இருப்பதேயாகும்.

-13-

எல். கே. அத்வானி

மத்திய அரசில், தகவல்-ஒலிபரப்பு அமைச்சராய்
இருந்த
திரு. லால் கே. அத்வானி அவர்கள் ஜாதகம்
பின்வருமாறு:

திரு. அத்வானி அவர்கள் பிரபவ வருஷம் ஐப்பசி
மாதம்
28-ஆம் தேதியன்று (8-11-1927)இல் பிறந்தார்.
கராச்சியிலும்
ஹைதராபாத்திலும் படித்தார். ஹைதராபாத்

என்றவுடன்
ஆந்திராவிலுள்ள ஹைதராபாத் என
எண்ணிவிடாதீர்கள்

சிந்துவிலும் ஹைதராபாத் என்று ஒரு பட்டணம்
உண்டு
எனவே, ஆந்திராவிலுள்ளதை `டெக்கான்
ஹைதராபாத்',
என வழங்குவர்.
பம்பாயில் சட்டம் பயின்ற திரு. எல். கே. அத்வானி,
இந்தியா சுதந்திரமடைந்த பிறகு, தம் குடும்பத்துடன்
இராஜஸ்தானுக்குச் சென்று குடியேறினார்.
அவசரநிலைப்
பிரகடனத்தினால் இவர் 1975-இல் கைது
செய்யப்பட்டு,
பெங்களூர் மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டார். 1977-
ஆம்
ஆண்டு ஜனவரி மாதம் 18-ஆம் தேதி டெல்லியில்
விடுதலை
செய்யப்பட்டார். இவர் உலகம் முழுவதும் சுற்றி
வந்தவர்.
கல்வி பயிலும்போதே இவருக்கு அரசியலில் அதிக
ஈடுபாடு
இருந்தது.
1965-இல் ஜகத்தியானி என்னும் பெண்ணைத்
திருமணம்
செய்துகொண்டார். ஆசைக்கு ஒரு பெண்ணும்
ஆஸ்திக்கு ஒரு

ஆணும் இவருக்கு உள்ளனர்.
இவர் ஜாதகத்தில் இவர் ஜன்ம இலக்கினம், சிம்மம். ஜன்ம இராசி, மேஷம். சூரியனும் புதனும் ஒன்று சேர்ந்திருப்பதால்தான் இவர் சட்டக்கல்வி பயின்றார். குரு
அஷ்டமத்தில் இருப்பதால் இராகு தசை இராகு சுயபுத்தியில்
21-1-78இல் சுயபுத்தி முடிந்தது. முடிவதற்கு இரு தினங்களுக்கு முன்பே இவருக்கு விடுதலை கிடைத்துவிட்டது.
ஆயுள்காரகனாகிய சனியைக் குரு ஆட்சியாகப் பார்ப்பதால் இவருக்கு பூரண ஆயுள் உண்டு. இராகு சுயபுத்தி
முடிந்து குருபுத்தி ஆரம்பமாகியதும் இவர் அமைச்சரானார்.
நவக்கிரக சஞ்சாரத்தைப் பொறுத்துத்தான் உலகில் சகல
விஷயங்களுமே நடைபெறுகின்றன என்பதற்கு, இவருக்கு
அமைந்த ஏற்றத் தாழ்வுகள் எடுத்துக்காட்டாகின்றன.
-15-
கார்ல் மார்க்ஸ்
பிறவிக் குறிப்புகள்
1818-வது ஆண்டு மே மாதம் 15-ஆம் தேதி இரவு சுமார் 2 மணியளவில் தோன்றினார்.
சிறப்பு அமிசங்கள்
1818-ஆம் ஆண்டுக் கிரகண புண் ணிய
காலத்திலும்

கும்ப இலக்கினத்திலும் பிறந்த கார்ல் மார்க்ஸின்
ஜாதகத்தில், இலக்கினாதிபதியாகிய சனி பகவான்
இலக்கினத்திலேயே வலிமை பெற்றவராகத்
திகழ்கிறார்.
இலக்கினமும் இலக்கினாதிபதியும் 3, 10-க்குரிய
செவ்வாயினால்
பார்க்கப்படுகின்றன. இத்தகைய அமைப்புடைய
கிரகச்
சேர்க்கையால்தான் கார்ல் மார்க்ஸ் பிறவியில்
வலிமையான
உடல் நலமுள்ளவராய்த் திகழ்ந்தார். என்றாலும்,
உடலுக்கும் ஆன்மாவுக்கும் உரிய கிரகங்கள்
இராகுவினால்
பாதிக்கப்பெற்றமையால், அளவுக்கும் மீறிய
கடுமையான
உழைப்பினால் அவர் உடல் நலிவடையலாயிற்று.
நவாம்ச இலக ்கினமான துலாம், தீய கிரகங்களுக்கு
இடையே இருபக்கமும் சிக்கிய நிலையில்
செவ்வாயின்

பார்வையிலிருந்த காரணத்தினால்தான் அவர்
வளரும்
காலத்தில் இளவயதிலேயே எண்ணற்ற
இன்னல்களுக்கு
ஆளாகவேண்டியிருந்தது. வாக்குக்குரிய கிரகம்,
தன் னுனுடைய சொந்த வீட்டிலேயே இலாப ஸ்தான
பலம் பெற்று
விளங்கியது. அதனால்தான் கார்ல் மார்க்ஸ்

சுயசிந்தனையாளராகவும் மிகச்சிறந்த
பேச்சாளராகவும் விளங்கினார்.
மேலும், வித்யாகாரகனாகிய புதன் நல்ல
வீட்டிலிருந்ததால்
புத்தி சாதுரியமும் திறமையும் அவருக்கு
இயல்பாகவே
அமைந்திருந்தன. சுக்கிரன் யோககாரகனாயும்,
அவன்
இரண்டாவது வாக்கு ஸ்தானத்தில் வலிமை பெற்றுத்
தனது
சொந்த வீட்டில் இலாப பலம் பெற்று விளங்கியதால்,
அவர் மற்றவர்கள் கருத்துகளைத் திருடவில்லை;
கடன்
வாங்கித் தம் சொந்தக் கருத்தாகச் சொல்லவில்லை.
தம்
கடுமையான சிந்தனை ஆய்வினால் கண்ட
கருத்துகளை
மற்றவர்களையும் பின்பற்றச் செய்யவைக்கும்
அளவுக்குப் பேச்சுத்
திறனும் எழுத்தாற்றலும் மிகுந்தவராய்த் திகழ்ந்தார்.
அவர் ஜாதகத்தில் கும்ப இலக்கினத்திலேயே சனி
பகவான் வீற்றிருக்கிறார். இந்தக் கும்ப இலக்கினம்
மர்மம் நிறைந்த மனிதர்களுக்கு மட்டுமே
அமையக்கூடியதாகையால், இந்த இலக்கினத்தில் சனி
பகவான் ஸ்தான
பலம் பெற்றுத் திகழ்கிறார். ஆனால், திக் பலத்தை
இழந்துள்ளார். அந்தக் கும்ப வீட்டில் சனிக்குப்
பதிலாக இராகு

அமைந்திருந்தால், கார்ல் மார்க்ஸ் மிகப்பெரிய
வேதாந்தியாய்த் திகழ்ந்திருப்பார்; சித்தாந்தியாகத்
திகழ்ந்திருக்கமாட்டார். ஆனால், அதற்கு நேர்மாறாக,
சனி செவ்வாயின்
பார்வையைப் பெற்றதாலேயே அவர், சிந்தனைச்
செல்வராகப் புகழ் பெற்றார். சனி பகவான் தமது
சொந்த
வீட்டிலேயே இலக்கினாதிபதியாகவும் மூலத்
திரிகோணத்திலும்
அமர்ந்துள்ளார். அதனால்தான் பாட்டாளி
வர்க்கத்தின்
உயர்வினையும் மதிப்பினையும் ஆதாரத்தையும்
தமது தத்துவக்
கோட்பாட்டின் அடிப்படை ஆதாரங்களாய்க்
கொண்டார்.
இதனால்தான், சமூகவியல் வாழ்விற்கு ஆதாரமாய்
இருப்பவை உழைப்பும் தொழிலும்தான் என்னும்
தத்துவத்தை
-18-
உலகம் உணரச் செய்தார். அவர் ஒரு
இராஜதந்திரியாகவோ ஆட்சியாளராகவோ தம்
வாழ்நாள் முழுவதுமே
விளங்காமலிருந்ததற்கு இந்தக் கிரக அமைப்பே
காரணமாகும். பத்தாவது ஜீவன ஸ்தானத்திற்கு
அதிபதியான
செவ்வாய், ஜாதகத்தில் நீசம் பெற்றிருப்பதாலும்
நீசபங்க
இராஜ யோகத்தைப் பெறாமல் 6-ஆவது வீட்டிற்குரிய

சந்திரனுடன் பரிவர்த்தனை யோகத்தைப்
பெற்றிருக்கிறார்.
ஆயினும், 3-க்கும் 6-க்கும் ஏற்பட்ட
பரிவர்த்தனையாக
இருப்பது தைத்ய யோகமாவதால் முக்கியத்துவத்தை
இழந்து
விடுகிறது. கைரகாம்சத்திலுள்ள புதனால்தான், அவர்
சமூக
இயலிலும் அரசியலிலும் மிகச்சிறந்த
சிந்தனையாளராகத்
திகழலானார்.
முக்கிய நிகழ்ச்சிகள்
கார்ல் மார்க்சுக்கு ஆறு வயதாக இருக்கும்போது
அவர்
பெற்றோர் கிறிஸ்துவர்களாக மதம் மாறினர்.
அப்போது
அவருக்குச் சூரிய தசை. அவரது ஜாதகத்தில்
சூரியன்
7-ஆம் வீட்டின் அதிபதியாக இருந்து 3-ஆம் வீட்டில்
சூரியனுடனும் இராகுவுடனும் அமர்ந்து,
கும்பத்திலுள்ள
சனியினாலும் தனுசிலுள்ள குருவினாலும்
பார்க்கப்படுகிறார்.
சந்திரன், அவரின் அகவுணர்வுக்குரிய மனத்தை
ஊக்கியதால், அவர் ஒரு சிறந்த மனவியல்
ஆய்வாளராகத்
திகழ்ந்தார். சந்திரனுடன் சேர்ந்துள்ள இராகு, அவரது
புரட்சிகரமான மனப்போக்குக்கு உரிய ஊக்கத்தையும்

உத்வேகத்தையும் அளித்தான். அதனால் மார்க்ஸ் மனித
சமுதாயத்தையே மாற்றியமைக்கும் புதிய சிந்தனைகளையும் நடைமுறை
ஒழுக்கத்தையும் தந்தார். கார்ல் மார்க்ஸ் கிரகண தினத்தன்று
பிறந்தவர். அதனோடு மேஷத்தின் ஐந்து கிரகங்களின்
சக்திக் கதிரியக்கங்களின் தீட்சண்யத்தில் பிறந்தவர்.
அதனால் இயற்கையின் நியதிப்படியே உலகிற்கு ஒரு புதிய
சிந்தனை வளத்தை வழங்குவதற்காகவே கார்ல் மார்க்ஸ்
அவதரித்தார் என்றே கூறலாம்.



செவ்வாய் வீட்டில் அமர்ந்த சூரியனால் அவர் தந்தை
இறந்தார். என்றாலும் அவர் யூத சமயத்திலிருந்து
கிறிஸ்துவ மதத்திற்கு மதம் மாற நேரிட்டது. அவரது
திருமணம் அவருக்குச் செவ்வாய் தசை சுக்கிரபுத்தி நடந்த
போது நிகழ்ந்தது. சந்திராலக்கினத்திலிருந்து செவ்வாய்
80ஆவது வீட்டிலும், நவாம்சத்தில் அவர் 2-க்கும் 5-க்கும்
உரியவராய் இருந்தாலும் சுக்கிரன் களத்திரகாரகராகச்
சொந்த தமது 4-வது வீட்டிலும் தசாநாதனாகிய
செவ்வாயின் வீட்டிற்கு 11-ஆம் வீட்டிலும்

இருந்ததாலும் தான்
அவரது தசையில் கார்ல் மார்க்சுக்குத் திருமணம்
நிகழ்ந்தது.
அதே சுக்கிர புத்தியில்தான் அவருக்குப்
பொருளாதாரத்
துறையில் கவனம் அதிகரித்தது. அப்போதுதான்
அவர்
முதல் முறையாக எங்கெல்ஸை சந்தித்தார். இராகு
தசையில்தான் அவரது புரட்சிகரமான சிந்தனைகளும்
தத்துவக்
கருத்துகளும் கோட்பாடுகளும் அவரது வாழ்வியல்
இலக்கியங்களாக உருவாயின. ஆறிலிருந்த
செவ்வாய்தான்
இத்தகைய புரட்சிச் செயல்களுக்கு ஆதாரமாயினார்.
இதனாலேயே பொதுமக்களில் சிலரின் பகைமைக்கும்
எதிர் ப்புக்கும் அவர் ஆளாக வேண்டியிருந்தது.
இராகு தசை சுய
புத்தியில்தான் மார்க்ஸ் தமது தத்துவக் கோட்பாட்டை
நூல் வடிவில் இயற்றியதோடு பல இடங்களுக்கும்
பிரயாணம் செய்தார். இதனால்தான் அந்நாளைய
முற்போக்குச் சிந்தனையாளர்களிடையே அவர்
பிரபலமாகத்
திகழ்ந்தார். இராகு தசை குரு புத்தியில்தான் கார்ல்
மார்க்ஸின் புகழ்பெற்ற கம்யூனிஸ சித்தாந்தம்
உருவாகி
மார்க்ஸீய கம்யூனிஸக் கோட்பாடாகப் பரவலாயிற்று
தனுசிலிருந் து குருவினால் பார்க்கப்பட்ட இராகுவாக
இருந்ததால்தான், மார்க்ஸ் மின்னல் வேகத்தில்

செயலாற்றியதோடு சமூகத் தீங்குகளுக்கு எதிராகப் போராடவும்
இயன்றது. சனி தசையில் புதன் புத்தி நிகழும்போது 1883-ஆவது ஆண்டு கார்ல் மார்க்ஸ் மரணமடைந்தார்.
ஆயுட்காரகனாகிய சனிபகவான் இலக்கினாதிபதியாகவே
இருந்துங்கூட, மரணத்திற்குரிய நட்சத்திர நாயகனாகிய



போது, மரணத்தை ஏற்படுத்திவிட்டார். மார்க்ஸின் ஜன்ம
இராசியின் இரண்டாவது ரிஷப இராசியினைச் சனி கடந்த
போது, மார்க்ஸின் மூன்றாவது சுற்று ஏழரையாண்டுச் சனியின் காலம் என்பது குறிப்பிடத்தக்கது.

கார்ல் மார்க்ஸின் ஜாதகம் இரண்டு வகையில் சிறப்பு உடையது. முதலாவது, சனியே பாட்டாளியின் கிரகம். எனவேதான் பாட்டாளி வர்க்கத்தாரிடையே அவருக்கு
மகத்தான மதிப்பும் மரியாதையும் செல்வாக்கும் இருந்து
வந்தன. இரண்டாவதாகச் சூரியன், சந்திரன், இராகு ஆகிய
மூன்று கிரகங்கள் செவ்வாய்க்குச் சச்சதுரமாக அமைந்து
சனியின் பார்வையிலிருந்ததால், அவர் ஒரு புரட்சிகரச்

சிந்தனையாளராய்த் திகழ்ந்தார், மார்க்ஸின்
ஜாதகத்தில்
4-ஆவது இடத்திலிருந்த புதன், மார்க்சுக்கு வரலாற்று
அறிவுத் திறனையும் சமதர்ம
சிந்தனையோட்டத்தையும்
மிகச்சிறந்த திறமையையும் வழங்கினார். எனவே,
ஜோதிட
சாத்திரத்தை இன் றைய கம்யூனிஸ்டுகள் ஏற்பதில்லை
என்றாலும், கம்யூனிஸ தத்துவக்கோட்பாடின்
முன்னோடிகளில்
முதல்வராகத் திகழ்ந்தவரும், `முதலீடு' (காபிடல்)
என்னும்
பொருளியல் அரசியல் நூலுக்கு ஆதாரகர்த்தாவுமான
மார்க்ஸின் வாழ்வுக்கும் வழியமைந்ததே
நவக்கிரகங்களின்
இயக்கம்தான் என்பதை உணர்ந்துகொள்ள
வேண்டும்.
புராதன இந்தியச் சிந்தனையாளர்களின் விண்வெளி
ஆய்வியல் வெறும் வெட்டவெளி ஆய்வாக
இராமல்,
வாழ்வியலுக்குப் பயன்படும் அபூர்வ
விஞ்ஞானமாகத்
திகழ்கிறது என்பதை இந்த ஜாதக ஆய்வின் மூலம்
அறியலாம்.

ŌM̐ṜN̲ ṜḌĪ□ṆṜẎŌM̐k̲h̲ d̲ṜĪÑĪM̐ṇṜM̐
பிறவிக் குறிப்புகள்
ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் 1836-ஆம் ஆண்டு,

பெப்ருவரி மாதம் 18-ஆம் தேதி காலை 6-23
மணிக்குத்
தோன்றினார்.
சிறப்பு அமிசங்கள் :
இவரது ஜென்மலக்கினம், கும்பம்; ஜென்மராசியும்
கும்பம்தான், இந்த ஜாதகத்தில், இலக்கினாதிபதியான
சனி
பகவான் 9-ஆவது பாக்கியஸ்தானத்தில் உச்சமாகவும்
குருவினால் வலுவுடன் பார்க்கப்பெற்றவராயும்
அமைந்துள்ளார். இலக்கினமும் குரு பார்வையைப்
பெற்றுத்
திகழ்கிறது. இலக்கினத்திலேயே சூரியன், சந்திரன்,
புதன் ஆகிய
கிரகங்கள் சேர்ந்திருப்பதோடு, குருவின்
பார்வையைத்
தீர்க்கமாகப் பெற்றிருப்பதாலேயே, அவரது
வாழ்க்கையில்
ஏற்பட்ட சூழ்நிலை மாற்றங்களின் விளாவாக அவர்,
மிகவும்

அரிதான யோகானுபவங்களைப் பெற நேரிட்டது.
சூரியன்,
சந்திரன், இலக்கினம் ஆகியவை முறையே ஆன்மா,
மனம்,
உயிர் ஆகியவற்றைக் குறிப்பவை. இவையனைத்தும்
நிறைவு
வீடான கும்பராசியில் அமைந்துள்ளது சிறப்புக்குரிய
அமிசமாகும்.

ஆத்மகாரகனாகிய சூரியன் குருவினால்
பார்க்கப்பெற்றதால் இராமகிருஷ்ணரது ஆன்மிக
முன்னேற்றமும்
வளர்ச்சியும் முதன்மை பெறலாயின. சந்திரனும்
அதே சூழ்நிலையில்
அமைந்ததால்தான், அவர் தமது இளவயதிலிருந்தே
மனவடக்கத்திற்கு உரிய வழிகளில் மனத்தைக்
கட்டுப்படுத்த
முடிந்தது. கும்ப வீட்டிற்கு யோககாரகனாகிய
சுக்கிரன்,
2-ஆவது ஸ்தானத்தில் வலிமை பெற்றிருக்கிறான்.
இராசியிலும் நவாம்சத்திலும் சுக்கிரன் மற்ற தீய
கிரகங்களுடன்
சம் ந்தப்படவில்லை. நவாம்சத்தில் நல்ல நிலையிலும்
இல்லை.
7-ஆம் வீட்டதிபதியான சூரியன் இலக்கினத்தில்,
மற்ற தீய
கிரகங்களின் சாயலற்றிருக்கிறார். குருவினால்
வலிமையாகப்
பார்க்கப்பெற்றுள்ளார். சுக்கிரனின் இந்த
நிலையினால்தான்,
இராமகிருஷ்ணருக்கு எந்த விதமான
காமவுணர்ச்சிகளோ
காம இச்சைகளோ ஏற்படாமல் இருந்ததோடு, தமது
சொந்த மனைவியையுங்கூடத் தாய்மையின்
அமிசமாக -
தாயாகவே - பாவிக்க இயன்றது.
மூன்று கிரகங்கள் உச்சமடைந்துள்ள இவரது

ஜாதகத்தின் சிறப்பால்தான் இந்திய தேசத்து
மிகச்சிறந்த
ஞானியர்களுக்குள்ளும் யோகியர்களுக்குள்ளும்
முதன்மையானவராய் ஸ்ரீராமகிருஷ்ணர் திகழ
முடிந்தது. அவரால்
இந்து மதம் உலக நாடுகளிலெல்லாம் தன் புராதன
மேன்மையை அறிவிக்கும் வகையில் பரவ முடிந்தது.
அவரது
ஜாதகத்தில் பரிவிராஜயோகம் அமைந்துள்ளது. அதா
வது, சனியோ இலக்கினாதிபதியோ,
இலக்கினாதிபதியாலேயே
சந்திரன் வீற்றிருக்கும் இராசியாதிபதியை
பார்வையிட்டால், யோகியொருவர் உதயமாவார்
என்பது ஜோதிட
சாத்திர ஆராய்ச்சி முடிவாகும். அவரது ஜாதகத்தில்
சனீஸ்வரனே

சந்திராலக்கினத்திற்கும் ஜென்ம லக்கினத்திற்கும்
அதிபதியாக அமைந்துள்ளார். ஒருவரது ஜாதகத்தில்
சனியின் அமிசங்களுள் ஒன்றிலோ அல்லது
செவ்வாயின்
அமிசங்களுள் ஒன்றிலோ சந்திரன் இடம் பெற்று,
சனியினால் பார்க்கப்
பட்டால்தான், அவர் துறவியாகவோ
சந்நியாசியாகவோ
மாறிவிட நேரும். அவரது ஜாதகத்தில் சந்திரன்
செவ்வாயின்
அமிசத்திலிருப்பதோடு சனியின் திருஷ்டியையும்

பெற்றிருக்கிறது. பிரக்ஞைகாரகரான புதன் அவரது ஜாதகத்தில்
இராசியிலும் நவாம்சத்திலும் வர்க்கோத்தமமாக அமைந்துள்ளார்.

முக்கிய நிகழ்ச்சிகள் :

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தம் இருபத்துமூன்றாவது வயதில் 1859-ஆம் ஆண்டு திருமணம்
செய்துகொண்டார். அந்தத் திருமணம் அவரது ஜாதகத்தில் சனி தசை
சந்திரபுத்தியில் நிகழ்ந்திருக்கிறது. 1856-ஆம் ஆண்டிலிருந்து 1864-ஆம் ஆண்டு வரையிலுந்தான் அவரது
வாழ்க்கையில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அப்போது
தான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் அத்வைத சாதனையைச் செய்து வந்தார். 1864-ஆம் ஆண்டு மிகவும்
முக்கியமான ஆண்டாகும். அந்த ஆண்டின் முடிவில்தான் அத்வைத
சந்நியாசியாகிய தோதபுரியைச் சந்தித்தார். அவர்தான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சிந்தனைகளையும் எண்ணங்களையும்
அத்வைத சித்தாந்தத்தின்பால் திருப்பினார். இந்த நிகழ்ச்சி
சனி தசையில் குருபுத்தியில் நிகழ்ந்துள்ளது. சனீஸ்வரனைக்
கொடிய கிரகம் என்பார்கள். என்றாலும் அவர்

மட்டுமே
உண்மையான சந்நியாசயோகத்தை ஒருவருக்கு
வழங்குகிறார்.
 ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கை முழுவதுமே
தெய்விக
அமிசங்கள் நிறைந்தது. தெய்வ பக்தியும்
விசித்திரமான
அபூர்வமான தெய்விக அமிசமுள்ள நிகழ்ச்சிகளும்
அற்புதங்களும்தான், மனிதனின் தெய்வ
நம்பிக்கையை உறுதிபெறச்
செய்கின்றன. அவரது ஜாதகத்தில் சூரியன், சந்திரன்,
புதன்

ஆகிய கிரகங்கள் கும்ப வீட்டில் அமர்ந்திருக்க,
அந்த இராசு
வீடே இராமகிருஷ்ணருக்கு ஜன்ம இலக்கினமாகவும்
இராசியாகவும் திகழ்கிறது. இலக்கினமும்
இலக்கினாதிபதியும்
குருவின் பார்வையைப் பெற்றிருப்பது சிறப்புக்குரிய
அமிசமாகும். ஸ்ரீராமகிருஷ்ணருக்குக் காளிமாதாவே
பரமானம
தெய்வமாகத் திகழ்ந்திருக்கிறாள்.
 ஸ்ரீராமகிரிஷ்ணரது ஜாதகத்தில் செவ்வாய்
பன்னிரண்டாவது வீட்டிலிருக்க அதுவே
செவ்வாயின் சயன
தோஷத்தை அறிவிக்கிறது. அதே சமயத்தில்,
ஞானத்திற்குரிய குருவும் புத்திக்குரிய புதனும்,
ஆத்மாவுக்குரிய

சூரியனும், மனத்திற்குரிய சந்திரனும் கும்ப வீட்டையே
இராசி முனையாகக் கொண்டிருப்பதாலும், அந்த வீடு தத்துவச் சிந்தனைக்குரிய வீடாகையாலும், ஸ்ரீராமகிருஷ்ணரின்
வாழ்க்கையே மனித வர்க்கத்தின் நாகரிகத்தில் ஒரு தெய்விக
பாதையைக் காட்டும் ஓர் ஒளி விளக்காகத் திகழ்கின்றது.
எல்லா நாடுகளிலும் அதன் கதிர் ஒளிவிட்டு, தேஜோ மயமான தெய்விக ஞானத்தையும் அத்வைத சித்தாந்தத்தின்
ஆத்மிகச் சிறப்புகளையும் துலங்கச் செய்து வருகிறது.
உலகத்தை உய்விக்க வந்த மகாத்மாக்களுள் மிகவும் உயர்ந்தவர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் என்பதை அவரது
பிறந்த கால ஜாதகமே நிரூபித்துவிடுகிறது!

-26-

## சத்ரபதி சிவாஜி

பிறவிக் குறிப்புகள் *

இந்திய தேசிய வரலாற்றில், இந்து சாம்ராச்சியத்தை நிலை நிறுத்திய சத்ரபதி சிவாஜி, இந்தியாவை ஆண்டு
வந்த மொகலாயப் பேரரசின் முடிவுக்கும் அழிவுக்கும்
காரணமாய் இருந்த ஒரு மாபெரும் வீரதீர பராக்கிரமசாலியாவார். அவர் கி. பி. 1630-ஆவது

ஆண்டு பெப்ருவரி மாதம்
19-ஆம் தேதி மாலை 6-26 மணியளவில்
தோன்றினார்.
-------------------
 * சிவாஜியின் பிறந்த இலக்கினத்தைக் குறித்து
வரலாற்று
ஆசிரியர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன.
சிவாஜியின் குடும்பத்தைச் சார்ந்தவர்களும்,
சிவாஜியிடம்
மானியம் பெற்றவர்களுமான மராட்டிய
குடும்பத்தினரின்
கைப்பொறுப்பில் இருந்த கைப்பிரதியாகும். இந்தக்
குறிப்பு,
இந்தப் பிறந்த தினக் குறிப்பு, தஞ்சை சரசுவதி
மகாலில்
உள்ள நூல் நிலையக் கையெழுத்துப் பிரதியான
`சிவபாரத்'
என்னும் நூலில் உள்ள சிவாஜியின் பிறந்த தினக்
குறிப்புடன்
ஒப்பிட்டுப் பார்க்கப் பெற்றுள்ளது. அதனோடு
சிவாஜியின்



சிறப்பு அமிசங்கள்
 சத்ரபதி சிவாஜியின் ஜன்ம இலக்கினம், சிம்மம்,
ஸ்திர
இராசியாகவும், அக்னி இராசியாகவும்
அமைந்ததுடன்,
இலக்கினாதிபதியான சூரியன் சப்தம ஸ்தானத்தில்

குருவுடன்
சேர்க்கை பெற்று இலக்கினத்தைப் பார்வையிடுகிறார்.
சிவாஜியின் ஜாதகத்தில் இராசிச் சக்கரத்தில்
இலக்கினாதிபதியான சூரியன், குருவுடன் கும்ப
வீட்டில் சேர்க்கை
பெற்றதோடு, நவாம்சை தனுசில், இலக்கினாதிபதியே
இலக்கினத்தில் சேர்ந்துள்ளதாலும் அவரது
இலக்கினம்
மிகவும் வலிமையுடையதாகும். அவர் உயிர், மிகவும்
வலிமை
பெற்ற உயிராகும். நடுத்தர உயரமும் கூர்மையான
கண்களும் வெண்ணிற மேனியும் குருவின்
அமிசத்தால்
ஏற்பட்டவையாகும். கருணை நிறைந்த
பெருந்தன்மையான
அவரது மனப்போக்கிற்கும் நவாம்ச
இலக்கினாதிபதியான
குருவே காரணமாகும். சந்திராலக்கினத்திற்கு
அதிபதியான
புதன் ஏழில் நீசம் பெற்றபோதிலும் நீசபங்கத்தை
பெற்றிருக்கிறார். மேலும், சுபகர்த்தா யோகமும்
ஜாதகத்தில் அமைந்துள்ளது. இவையெல்லாமாகச்
சேர்ந்து
சிவாஜியின் மேதைத் தன்மையை விளக்குகின்றன.
கும்ப வீடு
மர்மம் நிறைந்த ஸ்தானமாகும். அங்கு
இலக்கினாதிபதியான
சூரியனும் பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியான

குருவும்
சேர்ந்துள்ளதால் இராஜயோகம் அமைகிறது.
இதனால்தான்
சிவாஜி தம் செயலுக்குத் தகுந்தவர்களை
பார்த்தவுடனேயே
-------------
குடும்ப குருமார்களாக விளங்கியவர்களின்
பரம்பரையைச்
சார்ந்தவரிடம் உள்ள ஜாதகக் குறிப்புடனும் ஒப்பு
நோக்கிச்
சரியானதாக கருதப்பெற்றதாகும். இந்த ஜாதகம்,
சிவாஜி
வாழ்ந்த காலத்திலேயே சிறந்து விளங்கிய
(ஜ்யோதிஷி சந்து
என்பவரின் ஜோதிடக் குடும்பத்தைச் சார்ந்த) சிவராம்
என்பவரின் கைப்பட எழுதப்பட்ட குறிப்பாகும்.
இவர்
1777-ஆம் ஆண்டு இறந்தார். இவர், சிவாஜியின்
வாழ்நாளில்
வாழ்ந்தவர். ஆகையால், இந்தப் பிறவிக் குறிப்புதான்
மிகச் சரியான பிறவிக் குறிப்பாகும்.

தேர்ந்தெடுத்துக்கொள்வதிலும், அரசியலில் மிகவும்
இராஜ
தந்திரமாக நடந்துகொள்வதிலும் சிறந்து விளங்கி
வந்தார்.
சந்திரன் 4-9க்குரிய செவ்வாயினால்
பார்க்கப்படுவதால்

சிவாஜியின் உள்ளம் வீரத்தின் விளைநிலமாகியது. மேலும்,
புதனும் நல்ல நிலையில் அமைந்துள்ளதால், எந்தச் செயலையும் சிறப்பாகச் சிந்தித்து, விரைவாகச் செய்து முடிக்கும்
ஆற்றல் அவருக்கு இயல்பாக அமைந்திருந்தது. 2-ஆம்
வீட்டிற்கு அதிபதியான புதனே 2-ஆமிடத்தைப் பார்ப்பதால்
இராசபங்கம் ஏற்பட்டுவிடுகிறது.
அந்த 2-ஆமிடமும் யோககாரகனாகிய செவ்வாயினால்
11-ஆமிடத்திலிருந்து பார்க்கப்படுவதால், அவர் தனகாரகனான குருவுக்குத் திரிகோணத்திலும், 2-ஆமிடத்திற்கு
கேந்திர ஸ்தானத்திலும் வீற்றிருப்பதால்தான், சிவாஜியின்
வீரதீரச் செயல்களின் பயனாகத்தான் ஏராளமான பொருளாதாரச் செழிப்பும் வளமையும் உண்டாயின. பதினோராமிடத்தில் செவ்வாய் இருப்பதாலேயே அவர்
சிறந்த ஒழுக்கம் வாய்ந்தவராகவும், மிகச்சிறந்த வீரராகவும்
தாராளமான மனப்பான்மையும் இரக்க மனமும் கொண்டவராயும் மகத்தான செல்வங்களுக்கு அதிபதியாகவும் திகழ
முடிந்தது. நான்காம் வீட்டிற்குரியவரான செவ்வாய் 11-ஆமிடத்தில் இராகுவுடன் கூடியிருந்தாலும்,

குருவினால்
மிகவும் வலிமையாகப் பார்க்கப்படுகிறார். இது தவிர, இராசியிலும் நவாம்சத்திலும் அமைந்துள்ள மாத்ருகாரகனாகிய சந்திரனின் நிலைகள், அவருக்குத் தாயிடத்தில் இருந்த
அளவுக்கு மீறிய பாசத்தையும் அன்பையும் அறிவிக்கின்றன.
அவர் தாயாரான ஜீஜாபாய், சிவாஜிக்கு அவரது இளவயதிலிருந்தே புராண இதிகாசக் கதைகளைக் கூறி, அவரை
மிகவும் ஒழுக்கமுடையவராக விளங்கச் செய்தார். 4-ஆவது
ஸ்தானாதிபதி நல்ல இடத்தில் அமர்ந்ததோடு, பாபகர்த்தாரி யோகத்தைப் பெற்றுள்ளது. எனவே, சிவாஜி
போதிய கல்வி கற்கவில்லை என்பது தெளிவாகிறது. ஆயினும், ஞான, புத்திகாரகனாகிய குருபகவானின் கடாட்சத்தினால், அவர் புத்தகக் கல்வியினைக் கற்காவிட்டாலும்

புராதன புராண இதிகாசங்களை மிகவும் அக்கறையோடு
கேட்டுப் பழகியதாலேயே, ஸ்ரீராமரைப் போலவும் ஸ்ரீ கிருஷ்ணரைப் போலவும், பாண்டவர்களைப் போலவும்
விளங்க வேண்டும் என்னும் ஆசையையும் இலட்சியத்தையும்
மனத்தில் கொண்டு வளர்ந்தார். அதனால் அவரது

அறிவும்
புத்திக்கூர்மையும் வாய்ப்புகளும் புராண
புருஷர்களைப்
போன்ற புகழையும் பெருமையினையும் வீரத்தையும்
வெற்றியையும் அவருக்கு வழங்கின. சந்திரன்
வர்க்கோத்தமமாக
இருப்பதால் புதன், குருவின் வீட்டில் அமர்ந்ததாலும்
4-ஆவது ஸ்தானாதிபதி வித்யாகாரகனாகிய புதனின்
வீட்டில்
அமர்ந்து குருவின் பார்வையைப் பெற்றதாலும்
சிவாஜி
எப்போதுமே சுறுசுறுப்புள்ளவராகவும் மிகவும்
புத்திசாதுரியமுள்ளவராகவும் விளங்கினார்.
சிம்மமும் தனுசுவும் இராசியிலும் நவாம்சத்திலும்
இலக்கனமாக அமையப்பெற்றதாலும்தான், சத்ரபதி
சிவாஜி வில்வித்தையிலும், குதிரைச் சவாரி
செய்வதிலும்,
மல்யுத்தம் செய்வதிலும் மிகவும் கைதேர்ந்தவராக
விளங்கினார். இவரது ஜாதகத்தில் பலவித இராஜ
யோகங்கள்
அமையப்பெற்றிருந்தாலும் அவற்றுள் மிகவும்
முக்கியமானது
அதியோகமாகும். அதாவது, குரு, புதன், சுக்கிரன்
ஆகிய
மிக முக்கியமான சுபகிரகங்கள் சந்திரனுக்கு 6, 7, 8-
இல்
அமர்ந்துள்ளனர். பூர்வ புண்யாதிபதியான குரு
பகவான்,

நல்ல நிலையில் இருக்கிறார். ஆனால் 5-ம் பாவத்தில் கேது
வீற்றிருப்பதோடு, செவ்வாய் சனியினால் பார்க்கப்படுகிறது.
அவருக்கு 5 பிள்ளைகள் இருந்தன. ஆயினும் அவர்களைக்
குறித்து சிவாஜி மகிழ்ச்சியுடன் இருக்கவில்லை. ஏனென்றால்,
மூத்த மகன் அவர் எதிர்பார்த்ததைப் போல இருக்கவில்லை.

சிவாஜிக்கு எண்ணற்ற பகைவர்கள் இருந்தார்கள். என்றாலும் அவர்களையெல்லாம் தமது வீரதீரச் செயல்களாலும் சுயவலிமையினாலும் துணிவினாலும் தைரியத்தாலும் தந்திரத்தாலுமே வென்றார். வெற்றிபெற்று வீர
திலகமாக விளங்கினார். 7-ஆம் ஸ்தானாதிபதி சனீஸ்வரன்



3-இல் உச்சமாயிருக்க 7-ஆம் வீட்டில் இலக்கினாதிபதியும்
குருவும் வீற்றிருக்கின்றனர். களத்திரகாரகனாகிய சுக்கிரன்,
7-ஆம் அதிபனால் பார்க்கப்படுகிறான். (சந்திரலக்கினம்)

மேலும், களத்திரகாரகனுக்கோ செவ்வாய்க்கோ, செவ்வாய்க்கோ அல்லது களத்திரபாவத்திற்கோ எத்தகைய
தொடர்பும் இல்லாததோடு, 7, 8-ஆம் வீடுகளின்

அமைப்பும்
கவனிக்கத்தக்கதாகும். இத்தகைய கிரக நிலைகளின் அமைப்பினால்தான், சிவாஜி, பிற மஙகையரை
விரும்பாத தூய
மனம் படைத்தவராகவும் விளங்கினார். அவர்
மிகவும் அழகிய
மங்கையரைக் கைது செய்ய நேர்ந்தபோதிலுங்கூட அவர்களைத் `தாயே' என்றுதான் அழைத்ததாக
வரலாறுகள்
சான்று பகர்கின்றன. சுக்கிரன், உச்சம் பெற்ற
குருவினால்
பார்க்கப்பெற்றதாலும், நவாம்சத்தில் 7-ஆம்
பாவாதிபதி
உச்சம் பெற்றதாலும் சிவாஜி நான்கு அல்லது ஐந்து மனைவியரை மணந்தார்.

சிவாஜி, தாம் பிறந்த பிறகு, பல ஆண்டுகள்
வரையில்
தம் தந்தையைப் பார்க்க முடியாமல் இருந்திருக்கிறார். அவரது வீரதீரச் செயல்களுக்கும் ஆதாரமான
அத்தனை
போர்ப் பயிற்சிகளையும் கற்பித்த்வர்
தாதாஜியேயாகும்.
பித்ருகாரகன், நவாம்சத்தில் சனியினால்
பார்க்கப்பெற்றிருப்பதையும் கவனிக்கவும். ஆயினும்
சிவாஜி தம்
தந்தையாரைத் தெய்வமாகவே பாவித்திருக்கிறார். 9-
ஆவது
ஸ்தானம் பாதுகாக்கப்பெற்றிருப் தோடு, அந்த

ஸ்தானாதிபதி 10-ஆம் பாவத்தில் வீற்றிருந்து குருவினால் மிகவும்
வலிமையாகப் பார்க்கப்பெற்றிருப்பதாலும் சுக்கிரன் நல்ல
நிலையில் இருப்பதோடு 10-ஆம் பாவாதிபதி 9-ஆம் வீட்டிலமர் ந்திருப்பதும் கவனத்துக்குரியது. இத்தகைய கிரக
அமைப்புகளும் சேர்க்கைகளும், சிவாஜி எத்தகைய கெட்ட
பழக்கங்களுக்கும் தம் வாழ்நாள் முழுமையும் ஆளாகாமல்
இருந்ததையும், சாத்திரங்களை அறிந்து நடப்பதில் அவருக்கு
மட்டற்ற ஆர்வம் இருந்ததையும் அறிவிக்கின்றன. 9-ஆம்
பாவம் பாதிப்புகளற்றிருப்பதால், அவர் இந்து சமயத்தை
வளர்ப்பதிலும் பாதுகாப்பிலும் மிகவும் அக்கறை

கொண்டிருந்தார். ஆயினும், அவர் எப்போதும் மதவெறி
பிடித்தவராய் இருந்ததில்லை. அவர் எல்லா மதத்தினரையும்
மதித்து வந்தார். அவர் தமது இராணுவ முகாம்களில்
மங்கையரை மிகவும் மரியாதையாக நடத்தியதோடு அவர்
தம் இராணுவத்தினரின் ஒழுக்கத்திலும் மிகவும் அக்கறை

செலுத்தி வந்தார். இது வரலாற்று விமரிசகர்களால் பாராட்டத்தக்க அமிசமாக இருந்திருக்கிறது.
ஜோதிடத்
துறையிலுள்ளவர்களுக்கு சிவாஜியின் ஜாதகத்தில் அவரது
இலக்கினம், 9-ஆம் பாவம், 10-ஆம் பாவத்தின் சிறப்புகள்
மிகவும் சிலாக்கியமாக இருப்பது
வியப்புக்குரியதாகும்.

முக்கிய நிகழ்ச்சிகள்

அவரது முதலாவது திருமணம், அவரது ஜாதகத்தில் இராகுதசை புத புத்தியின்போது, பெங்களூரில் நிகழ்ந்தது.
திசாநாதன் இராகு புதனின் வீட்டிலும் (2-ஆம் பாவாதிபதி) புதன் இலக்கினத்திற்கு 8-ஆவது வீட்டிலும்
சந்திராலக்கினத்திற்கு 7-லும் அமர்ந்திருக்கிறார். இராகு
களத்திரகாரகனின் வீட்டிலேயே அமர்ந்துள்ளார். சிவாஜி
தமது மற்ற இரண்டு மனைவியரை 1657-இல், குரு தசை புதன் புத்தியில் மணந்தார். புதன் சிவாஜியின் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு 8-லும் குருபகவான் 7-லும்
வீற்றிருக்கின் னர். இராகுதசை முற்றிலும், சிவாஜியினை ஒரு
மாபெரும் வீரராக உருவாக்கும் காலமாக இருந்திருக்கிறது.

இராகு செவ்வாயுடன் கூடி வீரதீரச் செயல்களைப்
புரிவதற்குரிய உறுதியான உடலமைப்பையும்
உள்ளத்தில்
உறுதியான வலிமையையும் வழங்கியிருக்கிறது. கி.
பி. 1646-இல்
தான் சிவாஜி, தோரணா கோட்டையை அதன்
தளபதியிடமிருந்து கைப்பற்றியதோடு, பீஜப்பூர்
சுல்தானுக்கு
எதிரான செயல்களில் ஈடுபடலானார். குருதசை
தொடங்கிய
பிறகுதான் சிவாஜி, எண்ணற்ற இன்னல்களையும்
துன்பங்களையும் கடந்து, தமது திறமையாலும்
இராஜதந்திரத்தினாலும் எல்லாவற்றையும்விட
உணர்ச்சியின் உத் வேகத்தினாலும்

புத்திசாதுரியத்தினாலும் தம் சாம்ராச்சியத்தை
நிலை நாட்டினார்.
குருபகவான், சிவாஜிக்கு இராஜயோகத்தை
வழங்கினார்.
ஏனென்றால் அவர் பூர்வபுண்ணிய பாவாதியாக
இருந்ததோடு, இலக்கினாதிபதியான சூரியனுடனும்
சேர்ந்து முக்கிய
வலிமையான கேந்திரத்திலமர்ந்து, ஆதியோகத்தை
வழங்கியிருக்கிறார். சூரியன், புதன் செவ்வாய் ஆகிய
கிரகங்கள்
தாம், சிம்ம இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு மிக
முக்கியமான கிரகங்களாகும். சிவாஜியின் ஜாதகத்தில்
இந்த

உண்மை நிதரிசனமாகப் புலனாகின்றது. அவரது ஜாதகத்தில் அவருக்கு மிகவும் வலிமையான அதியோகத்தை
வழங்கிய கிரகங்கள் எல்லாமே அவரவர் சொந்த வீட்டில்
மிகவும் வலிமையாக அமைந்திருப்பதோடு, அவரை இந்திய
வரலாற்றிலேயே, உலக வீரர் பட்டியலிலேயே முதன்மை
பெற்ற வீரராக விளங்க வைத்தன. ஒருவருக்கு அதியோகம்
அமைந்திருக்குமானால், அவர் மனிதர்களின் மத்தியில்
மகாப்பிரபுவாகவும் செல்வந்தராகவும்
ஆட்சியாளராகவும் புகழ்பெற்றவராகவும்
மகிழ்ச்சியும் நல்ல உடல் நலம்
வாய்ந்தவராகவும் உயர்ந்த ஆன்மா உடையவராகவும்
எதிரிகளைப் புறங்காண்பவராகவும் மக்களால் மிகவும்
விரும்பத்தக்கவராகவும் விளங்குவார். எனவே, இத்தகைய
மகத்தான சிறப்புகளனைத்தையும் சுபகிரகங்கள் சிவாஜிக்கு
சிறப்பாக வழங்கின.

சிவாஜி நௌஷர்கானுடன் போரிட்டது குருதசை புதன் புத்தியிலாகும். அதே திசாபுத்தியில்தான் சிவாஜியின் வாரிசாக ஆண்மகன் ஒருவன்

அவருக்குப் பிறந்தான்.
நௌஷர்கானிடத்துச் சிவாஜி தோல்வியுற்றதற்கும்,
கிரகத்தின் தீய நிலைதான் காரணமாக
இருந்திருக்கிறது. குருவே
புத்திரகாரகனாகையாலும் புதன் சந்திராலக்னாதிபதி
யாகையாலும் அவருக்கு வாரிசாக மகன் பிறந்தான்.
அதையடுத்து மிகமுக்கியமான நெருக்கடியான நிலை
ஏற்பட்டது. அஃப்ஸல்கானை வென்ற பிறகுதான்
அவரது
எதிர்காலமே உருவாகியது. இந்த நிலை குருதசை
கேது
-34-
புத்தியில் தோன்றியது. கேது குருவின் வீட்டில்
அமர்ந்து
செவ்வாயினால் பார்க்கப்பெற்றதால், சிவாஜியின்
வெற்றி
உறுதியாகியது. சிவாஜி, அஃப்ஸல்கான் ஏற்படுத்திய
மிகவும் பயங்கரமான சூழ்நிலையிலிருந்து உயிர்
தப்பியதுமன்றி, அஃப்ஸல்கானையும் அழித்து,
வெற்றியும் பெற்றார்.
குருதசை சந்திரபுத்தியில் மேலும் இரண்டு முக்கிய
நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. சிவாஜியைக் கொலை
செய்வதற்கு
இயைத்கான் முயன்றான். ஷாஜியும் மரணமடைந்தார்.
சிவாஜியின் ஜாதகத்தில், திசாநாதனும் புத்திநாதனும்
மாரக வீடுகளில் அமர்ந்திருந்ததால் இந்நிலை
ஏற்பட்டது.
ஆயினும் மற்ற கிரகங்களின் வலிமையினால்,

அவனது
சதிச் செயல்கள் வெற்றியடையவில்லை. குருபகவான்
பித்ருகாரகனுக்கு 2 - ஆம் வீட்டிலும், சந்திரன்
எட்டிலும்
இருந்ததாலும்தான் சிவாஜி வெற்றி பெற்றார்; உயிர்
தப்பினார். மேலும் சனி, சிவாஜியின்
ஜன்மராசியிலிருந்து
4-ஆம் இடத்திலிருந்து நகர்ந்த காலம் அதுவாகும்.
குருதசை முதல் பன்னிரண்டு ஆண்டுகள் வரை,
மொகலாயப்
பேரரசின் கடைசி சக்கரவர்த்தியான ஔரங்கசீப்பை
எதிர்த்து மிகவும் பயங்கரமாகப் போரிட்டார். இதன்
விளைவாகத்தான் ஔரங்கசீப், சிவாஜியை மலை
எலியாகக் கருதி அவரை அடக்கி ஒடுக்கும்படி
பலத்த
சேனைகளுடன் ஜெய்சிங் என்னும் தம் இராஜபுத்திர
தளபதியை
தக்காணத்துக்கு அனுப்பிவைத்தார். எனவே,
ஔரங்கசீபின்
மாபெரும் சேனையை வெல்வது அரிது என்பதை
நன்கு
உணர்ந்து சத்ரபதி சிவாஜி, சமாதானம் வேண்டினார்.
இத்தகைய இக்கட்டான நிலை, சிவாஜியின் குருதசை
செவ்வாய் புத்தியில் நிகழ்ந்தது குஜன் யோககாரனாக
இருந்தும் குருவினால் பார்க்கப்பெற்றவராக
இருந்தும்,
கோசார நிலையில் செவ்வாயும் சனியும் 9-
ஆமிடத்தையும்

4-ஆமிடத்தையும் பார்வையிட்ட சமயம் அதுவாகும், சந்திரா
லக்கினத்திலிருந்து 3-8 ஆதிபத்தியத்திலிருந்த செவ்வாய்
சனி கோசார நிலையே அந்நிலைக்குக்
காரணமாயிற்று.
-35-
குருதசையின் முடிவில் சிவாஜி ஆக்ராவுக்குச் செனற
போதுதான், ஔரங்கசீப் தம்மை
அவமானப்படுத்துவதற்காகத்தான் அவ்வாறு
செய்தான் என்பது அவருக்குத்
தெரிந்தது. சிவாஜி ஔரங்கசீபின் சதிச் செயலிலிருந்தும்
அவனது தளபதியின் பயங்கரச் சதியிலிருந்தும் மிகவும்
சாமர்த்தியமாகத் தப்பிச் சென்றுவிட்டார். இராகுவும்
செவ்வாயும் சேர்க்கை பெற்றது தீயதுதான் என்றாலும்
அவர்கள் சேர்ந்துள்ள வீடு சிறப்பானதாகையால்தான்,
சிவாஜி உயிருக்கு ஆபத்தான
சதிச்செயல்களிலிருந்தெல்லாம்
தப்ப முடிந்தது. ஔரங்கசீப் சிவாஜிக்கு இழைத்த
அவமானத்தின் விளைவாகத்தான் இந்திய வரலாற்றில்
முக்கியமான திருப்பு முனை ஏற்பட்டது. சிவாஜிக்குச்
செயலாற்றும் சிங்கம் போன்று இதயம்
அமைந்திருந்தது.
அவரது ஜென்ம இலக்கினமே சிம்மந்தானே!

சனி மூன்றாம் இடத்தில் உச்சம் பெற்று குருவினால் பார்க்கப்பெற்றாலே இராஜயோகம் ஏற்படும்.
அதனால்
சிவாஜிக்கு சனிதசை தொடங்கியதுமே ஔரங்கசீப் சிவாஜியை ஓர் அரசராக மதிக்கத் தொடங்கினார். சிவாஜியும் மொகலாயரின் ஆட்சிப் பிடியிலிருந்து முழுமையாக
விலகிக்கொண்டார். இதற்குப் பிறகுதான் சிவாஜியின் வாழ்க்கையில் மிகமுக்கியமான, மகத்தான, மறக்க முடியாத
நிகழ்ச்சி நிகழ்ந்தது. சிவாஜிக் ு முடிசூட்டு விழாவும் இராஜ்யாபிஷேகமும் அவரது சனிதசை கேது புத்தியில்
தான் நிகழ்ந்தன. அதே சமயத்தில் அவர் தாய் ஜீஜாபாய்
இறந்தார். சத்ரபதி சிவாஜி, சனிதசை செவ்வாய் புத்தியில்
மரணமடைந்தார். சனியே மாரகாதிபதியாகவும் குரு சந்திராலக்கினத்திற்கு 3-8க்கும் ஆட்சி பெற்று இராசியிலும்
நவாம்சத்திலும் இருந்ததால் சிவாஜிக்கு மரணம் ஏற்பட்டது.
சிவாஜி இரத்த மூலத்தினாலும் கடுமையான சுரத்தினாலும்
காலமானார்.

முக்கிய அம்சங்கள்

இந்திய வரலாற்றில் முக்கிய பங்கு வகிக்கும் சிவாஜிக்கு

அத்தகைய மகத்தான மேன்மையை அளித்த
கிரகசேர்க்கைகள்
-36-
எவை என்பதுதான் ஜோதிடத்துறையில்
உள்ளவர்களுக்குப் பயன்படுவதாகும். கடவுளால்
தேர்ந்தெடுக்கப்
பெற்றவர்தான் அவர் என்பதை அவரது ஜாதகமே
எடுத்துக் காட்டுகிறது.

அவரது ஜாதகத்தில் அமைந்த அதியோகம் மிக
முக்கியமான வலிமையான ஒரு யோகமாகும். இந்த
யோகம், குரு
சுக்கிரன், புதன் ஆகிய கிரகங்களால்
வழங்கப்பட்டது.
அதில் கடைசி கிரகமான புதன் நீசபங்கத்தால் மிக்க
வலிமை பெற்றிருந்தார். சந்திராலக்னாதிபதியும்
நீசபங்கமடைந்ததுடன், சந்திரன் வர்க்கோத்தமம்
பெற்றதோடு
இருகிரகங்களின் பார்வையையும் பெற்றார்.
இத்தகைய
குறிப்பிடத்தக்க இராஜயோகமானது மிகவும் தாழ்ந்த
பொருளாதார நிலையில் பிறந்தவரையும்
அரசனாக்கிவிடும்.
(4 கிரகங்கள் சந்திரனை பார்வையிட
வேண்டியிருக்கும்)
ஆனால் இரண்டு கிரகங்களை விசேஷ
பார்வையுடன்பார்த்தன.
சந்திரன் பரிபூர்ணமாகவும் வர்க்கோத்தமமாகவும்
இருந்திருக்கிறார்.

11 - ஆம் பாவாதிபதி (புதன்), 9-வது பாவாதிபதி (செவ்வாய்) 2-ஆம் பாவாதிபதி (புதன்) ஆகியவற்றில் ஏதேனும் ஒரு கிரகம் சந்திரனுக்குக் கேந்திர ஸ்தானத்தில் அமர்ந்தாலே யோகமுண்டு. (இங்கு இரண்டு கிரகங்கள் கேந்திரத்திலமர்ந்துள்ளன.) குரு 2-ஆம் பாவம், 5-ஆம் பாவம் அல்லது 11 ஆம் பாவமாக இருக்கவேண்டும். (இங்கு அவர் 5-ஆம் பாவதிபதி) அவ்வாறு இருந்தால் அத்தகைய நபர், ஒரு பெரிய சாம்ராச்சியத்தை ஸ்தாபித்து ஆட்சி செய்யும் அரசராவார் என்பது சாத்திரம். அத்தகைய இராஜயோகம் சிவாஜியின் ஜாதகத்தில் மிகவும் வலிமையாக அமைந்துள்ளது. பிறகு, சந்திரன் கன்னி வீட்டிலிருக்க, புதனால் பார்க்கப்பெறுகிறார். இதுவும் இராஜயோகத்தைக் குறிப்பதாகும். இவ்விதமாகப் பலவித கிரகச் சேர்க்கை அவரது ஜாதகத்தில் அமைந்திருந்தன.



இவரது ஜாதகத்தில் மற்றொரு சிறப்பான அமிசம் செவ்வாய், சனி, இராகு ஆகியவற்றுக்கிடையே ஒன்றுக்கொன்று தொடர்பு எதுவுமே இருக்கவில்லை. செவ்வாயும்

இராகுவும் சேர்ந்திருப்பதாகத் தோன்றினாலும் அவை
16
வித்தியாசத்தில் விலகியே இருந்தன.
குருபார்வையினால்
சகல சௌபாக்கியங்களும் ஏற்பட்டுள்ளன.
சிவாஜி தம் குடிமக்களை அன்போடும்
அமைதியாகவும்
இருக்கும்படி ஆட்சி செய்துவந்தார். குரு, சூரியன்,
செவ்வாய் ஆகிய கிரகங்களின் வலிமையினால்,
அவர் மிகச்
சிறந்த வீரராகவும் நிர்வாகத்தில்
திறமைவய்ந்தவராகவும்
சிறந்த வேந்தராகவும் விளங்கினார். மக்களின்
இதயங்களைக்
கவர்ந்த அவர், வெற்றிவீரராகத் திகழ்ந்தார்.
இந்தியர்களின் தன்னம்பிக்கையை வளர்த்தவர்களுள்
சிவாஜி
முக்கியமானவராய்த் திகழ்கிறார்.
-38-
சரண்சிங்
இந்திய அரசியலில் மிகவும் பரபரப்பூட்டிய
அரசியல்
தலைவர்களுள் முக்கியமானவராய்த் திகழ்ந்தவர் ஸ்ரீ
சரண்சிங்
அவர்களாவார். இவர் உத்தரப்பிரதேசத்தைச் சார்ந்த
மீரட் மாவட்டத்தில் நூர்பூர் என்னும் ஊரில் 1902-வது
ஆண்டு டிசம்பர் மாதம் 23-்ரிஆம் தேதி, மத்திய
வகுப்பு

விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். இவரது ஜாதகம்
பின்வருமாறு :
-39-
இவர் ஹஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவராகையால்
இராசி, கன்னியா ராசி; ஜென்ம இலக்கினம்,
விருச்சிகம்.
79 வயது ஆகியுங்கூட இவர் சுறுசுறுப்பாகப்
பணியாற்றி
வருகிறார். ஜனதா ஆட்சிக் காலத்தில் மிகவும்
பிரபல்யம்
அடைந்திருந்த இவருக்கு விவசாயிகளிடத்தில்
மகத்தான
செல்வாக்கு அமைந்துள்ளது. இவருக்கு ஓர் ஆணும்
5
பெண்களும் உள்ளனர். இவரது மனைவியார்
காயத்திரிதேவியாகும்.
இவரது இலக்கினம், விருச்சிகம், இலக்கினாதிபதி
செவ்வாய் ஆறுக்குரிய ஆதிபத்தியத்தைப் பெற்றுப்
பதினொன்றில் அமர்ந்து, அந்தச் செவ்வாயையும்
குரு, ஒன்பதாம்
பார்வையாகப் பார்ப்பதால், கடைசிவரையிலும்
இவருக்கு
அரசியல் ஈடுபாடு அமைந்திருக்கும்.
வாக்கு ஸ்தானத்தில் புதனும் சூரியனும் சனியும்
ஒன்று
சேர்ந்து இருப்பதால் சட்டப்படிப்பு பயின்றார்.
இராஜாஜி
அவர்களுக்கும் விருச்சிக இலக்கினம். ஆயினும்

குரு மகரத்தில்
நீசம். அதைப் போலவே இவரது ஜாதகமும்
அமைந்துள்ளதைக் கவனிக்கவும். இவருக்கு 1982-ல்
சனிபகவான் விரைய
ஸ்தானத்துக்கு வருகிறார். தற்போது இவருக்கு
நடப்பது
ஜன்மச் சனியின் காலம் என்பது குறிப்பிடத்தக்கது.
-40-
பேரறிஞர் பெர்னார்ட் ஷா
பிறவிக் குறிப்புகள்
ஜார்ஜ் பெர்னார்ட் ஷா அவர்கள் 1856-ஆம் ஆண்டு
ஜூலை மாதம் 26-ஆம் தேதி நள்ளிரவு நேரத்தில்
பிறந்தார்.
சிறப்பு அமிசங்கள்
ஜார்ஜ் பெர்னார்ட் ஷா, ஆங்கில மொழி
இலக்கியத்தில்
புகழ் பெற்ற பேரறிஞர். குறும்புத்தனமாகப்
பேசுவதிலும்
நகைச்சுவையோடும் நடையழகோடும் மிகச்சிறந்த
சொல்லாட்சியுடனும் எழுதுவதில் புகழ்பெற்ற
எழுத்தாளர்.
இவர் பெயரிலுள்ள `ஜார்ஜ்' என்னும் பகுதி பிரிட்டிஷ்
ஆட்சியிலுள்ள பலருக்கும் பெயராய்
அமைந்திருந்ததால்
அப்பெயரையே, ஆங்கில மொழியில் அமைந்த
அகோரமான
பெயர் என இவர் கருதினார்.
ஆகவே, தமது பெயரை ஜி. பி. ஷா என்று

சுருக்கமாய் எழுதி வந்தார். இவரது நூல்கள், நாடகங்கள் ஆகிய
அனைத்துமே ஆங்கில மொழி இலக்கியத்தில் முதன்மையாகத் திகழ்வன.

-42-

இவரது ஜெனன ஜாதகத்தில் ஜென்ம இலக்கினமும் சந்திரனும் புதனும் இராகுவும், இராசியிலும் நவாம்சத்திலும் வர்க்கோத்தமமாக இருப்பதே ஒரு முக்கியமான
சிறப்புக்குரிய அமிசமாகும். புதன், வித்யாகாரகன்; குரு
புத்திக்குரியவன். இவர்கள் இருவருமே அவரவர் சொந்த
வீட்டில் மிகவும் வலிமையுடையவர்களாய்த் திகழ்கிறார்கள்.
மனத்திற்குரிய சந்திரன் உச்சமாகவும் இருக்கிறான்.
இலக்கினாதிபதி சூரியனுடன் சேர்க்கை பெற்று, நவாம்சத்திலிருக்கும்போது குருவினால் பார்க்கப்பட்டு, இலக்கினாதிபதியே இலக்கினத்தைப் பார்வையிடுகிறார். வாக்கு வன்மைக்கும்
பேச்சுத்திறனுக்கும் எழுத்து ஆற்றலுக்கும் உரிய புதன்,
தனது சொந்த வீட்டில் இலக்கினத்திற்கு இரண்டாவதான
வாக்குஸ்தானத்தில் வர்க்கோத்தமம் பெற்றிருப்பதாலேயே,
இவர் உலகத்திலே மிகவும் புகழ்பெற்ற பேரறிஞராக

விளங்க
முடிந்தது. இதனால்தான் பெர்னார்ட் ஷாவின்
அறிவும்
மனமும் வெகு விரைவாகச் செயல்படவும்,
சனியோடு
சேர்க்கை பெற்றதால்தான் குயுக்தியாகவும்
குறும்பாகவும்
அதே சமயத்தில் மிகவும் புத்திசாதுரியமாகவும்
உரையாடும்
ஆற்றலைப் பெற்றவராகவும் திகழ்ந்து வந்தார்.
நவாம்சத்திலே புதன் அதே வாக்குஸ்தானத்தில்
வர்க்கோத்தமமாக
இருந்தால்தான் இவரது உரையாடல்கள் நகைச்சுவை
பொருந்தியவையாய் இருந்தன. அவை ஆழ்ந்த
சிந்தனையில்
பிறந்தனவாயும் நேர்மையும்
உண்மையுமுடையவையாயும்
விளங்கின.

இவரது ஜாதகத்தில் புதன் வர்க்கோத்தமமாகவும்
பாக்கிய ஸ்தானமாகிய 9-ஆவது வீட்டிற்கும் ஜீவன
ஸ்தானமாகிய 10-ஆவது வீட்டிற்கும் அதிபதியாகிய
சனியுடன்
சேர்க்கை பெற்றதாலேயே இவரால் எழுத்துத்
தொழிலில்
பெரும் பொருளை ஈட்ட முடிந்தது. இதனால்தான்
இவருக்கு
உலகமெங்கும் எண்ணற்ற வாசகர்கள் இருந்தனர்.
சுக்கிரன்

இலக்கினத்திற்கு 4-வது வீட்டுக்கு அதிபதியான
சூரியனுடன்
சேர்க்கை பெற்றதால்தான் ஷா இசைத்துறையிலும்
கலைத்
துறையிலும் மிகவும் புகழ்பெற்ற விமரிசகராகவும்
திகழ
-43-
முடிந்தது. சந்திரன் செவ்வாயின் பார்வையைப்
பெறுகிறார்.
புதன் சனியுடனும் குருவுடனும் இராகுவுடனும்
சேர்க்கை
கொண்டு இராசியிலும் அமிசத்திலும் சனியின்
பார்வையைப் பெறுவதாலேயே எதையும்
தத்ரூபமாகக் க ாண்பதைப்
போல எழுதும் ஆற்றலுடன் ஷா விளங்கினார். இவர்
தாயார்தான் இவர் புகழுக்கு பெருமைக்கும்
ஊக்கமும்
ஊட்டமும் உற்சாகமும் வழங்கியவர். இவர் தாயாரும்
நீண்ட ஆயுளுடன் வாழ்ந்திருந்தார். மாத்ருகாரகன்
நல்ல
இடத்தில் அமைந்திருந்ததாலேயே, தாயுக்கு தீர்க்க
ஆயுள்
உண்டாகும் நிலை ஏற்பட்டது. இலக்கினமும் சந்திரா
லக்கினமும், இராசியிலும் நவாம்சத்திலும்
வர்க்கோத்தம
பலத்தைப் பெற்றதால், அதுவே இராஜயோகமாயிற்று.
நவாம்சத்தில் மூன்று கிரகங்களினால் அவை
பார்வையிடப்

பெற்றதால், இவர் தம் இளமைப் பருவத்தில் மிகவும்
துன்பங்களையும் இன்னல்களையும் அனுபவித்து
எழுத்துத்
தொழிலையே நம்பி, படிப்படியாக முன்னேறி,
பேரறிஞராகவும் பெருஞ்செல்வராகவும் ஆக
முடிந்தது. வீரியத்துக்குரிய
சூரியன் நல்ல நிலையில் அமைந்ததாலேயே
பெர்னார்ட் ஷா
அவர்கள் நல்ல ஆரோக்கியமுடனும் உணர்ச்சியும்
ஊக்கமும்
உற்சாகமும் சிறிதும் குன்றாமலும் தமது வாழ்நாள்
முழுவதும் வாழ இயன்றது. இவரது ஜாதகத்தில்
அமைந்த
காஹலயோகம்தான் இவரைக்
கருணையுடையவராகவும்
உயர்ந்தவராகவும் உத்தமராகவும் பற்பல
நன்மைகளைச்
செய்பவராகவும், பெருமதிப்பையும் பெரும்
புகழையும்
அடைபவராகவும் செய்தது. குருபகவான்
இராகுவுடன் சேர்ந்து
பதினோராம் வீட்டிலமர்ந்துள்ளதால்தான் இவர்
தத்துவச்
சிந்தனையாளராகவும் சமயவாதியாகவும் திகழ்ந்தார்.
ஜாதகத்தில் ஜென்மலக்கினத்துக்கு 5-வது வீடாகிய
பூர்வ
புண்ணிய ஸ்தானத்தில் கேது அமைந்ததால்
புத்திரபாக்கியம்

கிட்டவில்லை. பூர்வபுண்ணியாதிபதியும் சனியுடனும் புத்திர
காரகனாகிய குருவுடனும் இராக ுவும் சேர்ந்திருந்தாலும்
நவாம்சத்திலும் பூர்வ புண்ணியஸ்தானம் பாதிக்கப்பட்டதாலும் இவருக்கு மக்கட்பேறு வாய்க்கவில்லை.

-44-

முக்கிய நிகழ்ச்சிகள்

இராகு தசையில் இவருக்குச் சின்னம்மை நோய் தோன்றியும் தழும்பே இல்லாமல் இவர் தப்பித்தார். அதற்குப் பிறகுதான் அவர் அம்மை குத்துவதற்கு எதிர்ப்பாளரானார். குருதசை
சுக்கிரபுத்தியிலிருந்துதான் இவர் பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையை அடைய முடிந்தது.
குருதான் தனகாரகராகி இலாப வீட்டில் அமர்ந்திருப்பதைக்
கவனிக்கவும். 1888-ஆம் ஆண்டுவரை இவருக்கு இராகு
தசை நீடித்ததால் இவர் புத்திசாதுர்யத்தாலும் புத்தி கூர்மையினாலும் புகழ் பெறலானார். 1879-லிருந்து 1885-ஆவது
ஆண்டுக்குள் இவர் ஐந்து நவீனங்கள் எழுதி முடித்தார்.
1898-ஆவது ஆண்டில் குருதசை சுக்கிர புத்தியில் இவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. சுக்கிரன் இலக்கினாதிபதியாகவும்

களத்திரகாரகனாகவும் இருப்பதோடு சுக்கிரனிலிருந்து ஒன்பதாவது வீட்டில் குருபகவான் வீற்றிருப்பதும் கவனிக்கத்தக்கது. நவாம்சத்தில் 7-ஆவது வீட்டில் சுக்கிரன்
இருப்பதாலும் தசாநாதனாகிய குரு 8-ஆவது ஸ்தானத்திலுமிருப்பதாலே திருமணம் அவ்வாறு நிகழ்ந்தது. புதன் தசை
கேது புத்தியில்தான் இவருக்கு நோபெல் பரிசு கிடைத்தது.
புத்திநாதனாகிய கேதுவும் தசாநாதனாகிய புதனும் வர்க்கோத்தமம் பெற்றதோடு இலக்கினத்திலிருந்து நல்ல
வீடுகளில் இருப்பதையும் கவனிக்கவும்.
தசாநாதர் புத்திஸ்தானத்தில் ஆட்சி பெற்றதும் தனகாரகனின் வீட்டில் அமர்ந்ததும், இவருடைய புகழ்ச்
செல்வ உயர்வுக்கும் பொருட்செல்வ வளமைக்கும் ஆதாரமாயின. 1923-ஆம் ஆண்டிலிருந்து புதன் தசை
தொடங்கியதிலிருந்து ஜார்ஜ் பெர்னார்ட் ஷாவின் புகழ் உலக
நாடுகள் எங்கிலும் பரவலாயிற்று. 2-வது ஸ்தானாதிபதி
இரண்டிலேயே இருப்பதும் 3-வது ஸ்தானாதிபதி இலக்கினத்திலிருப்பதும் இவரது தீர்க்காயுள் வாழ்க்கைக்கு
ஆதாரமாயின. இவர் 1950-ஆம் ஆண்டு சுக்கிரதசை சுக்கிர

புத்தியில் மரணமடைந்தார். 94 வயதுக்கு மேல்
தீர்க்காயுளுடன் வாழ்ந்த இந்தப் பேரறிஞரின்
பெரும்புகழ் காலத்தால்
-45-
அழியாததாயிற்று. தீக்காயுள் வாழ்வுக்கு இவரது
ஜாதகம் ஓர் எடுத்துக் காட்டாகும். அம்மை நோய்க்கு
ஊசி
மருந்து குத்துவதைக் கடுமையாக எதிர்த்து
வந்ததோடு சைவ
உணவின் முக்கியத்துவத்தைப்பற்றியும் பெரிதும்
விளக்கி
வந்தார். ஆங்கில அலோபதி வைத்தியத்தை மிகக்
கடுமையாக எதிர்த்துக் கண்டித்து எழுதிவந்தார். இவர்
மனிதர்களின் ஈனச் செயல்களையும்
பலவீனங்களையும் பகிரங்கப்
படுத்தியதோடு நலந்தரும் குணங்களையெல்லாம்
புகழ்ந்தார்.
இவர் ஆங்கில மொழியில் ஆற்றிய இலக்கியத்
தொண்டு
இம்மொழிக்கு அகில உலகத்திலும் போற்றத்தக்க
புகழையும் பெருமையினையும் தேடிக் கொடுத்தது.
ஜோதிடம்
பயிலும் மாணவர்களுக்கு இவரது ஜாதகம்,
கீழ்க்காணும்
காரணங்களால் முக்கியத்துவமுள்ளதாக
அமைந்துள்ளது.

1. இவரது ஜாதகத்தில் கிரகங்களின் வர்க்கோத்தம
நிலைகளும் ஸ் க்ஷேத்திர நிலைகளும் கூடுதலாக

அமைந்துள்ளன.
2. இலக்கினங்களின் ஆதார நிலையும் பிரகாசமான கிரக நிலைகளும் இவர் ஜாதகத்தில் சிறப்பாகவுள்ளன.
3. இவரது இலக்கியப் புகழுக்கும் பெருமைக்கும் உயர்வுக்கும் இவரது ஜாதகத்தில் அமர்ந்த புதன், சனி, குரு ஆகியவர்கள் எப்படி காரணர்களாக அமைந்துள்ளனர் என்பது நோக்கத்தக்கது.

-46-

மகாத்மா காந்திஜி

பிறவிக் குறிப்புகள்

1869-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ஆம் தேதியன்று, மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி பிறந்தார்.

சிறப்பு அமிசங்கள்

அண்ணல் காந்தியடிகளின் ஜாதகத்தில் ஆத்மகாரகனாகிய சூரியன், இலக்கினத்துக்குப் பன்னிரண்டாம் வீட்டிலும், குருவினால் வலிமையாகப் பார்க்கப்பெறுகிறார். குரு 3-6-க்கு உரியவர் அத்தகைய சந்திராலக்கினத்துக்குப் பத்தாவது வீட்டில் அமர்ந்து சனியின் பார்வையைப் பெற்றிருக்கிறார். இவற்றினால்தான் சமயப் பற்றுணர்வுகள் இவரிடம் பக்தியாகப் பரிணமித்தன. குருபகவான், புத்திக்கும்

மதப்
பற்றுக்கும் அதிபராகையால் அவர் நவாம்சத்தில்
நீசமாகத்
தான் இருக்கிறோரே தவிர நீசபங்கத்தைப்
பெறவில்லை.
-48-
இத்தகைய கிரக அமைப்புகள்தாம், இவர் சனாதன
வைதிக இந்துக்களுக்கு எதிரான போராட்டங்களை
நடத்தவும், இந்தியர்களின் சமூக, சமய
இயல்துறைகளில் இவர்
தமது சொந்தக் கருத்துகளை வலியுறுத்தி வற்புறுத்தக்
காரணமாகவும் அமைந்திருந்தன. துலாம் வீட்டில்
செவ்வாயும் புதனும் சுக்கிரனும் கடைசி இரண்டும்
இராஜயோகத்தைத் தருவனவாக அமையலாயின.
இங்கு இவரது
இலக்கினாதிபதி செவ்வாயுடன் சேர்ந்துள்ளதால்
இவர் பாபகர்த்தரி
யோகத்தையுடையவராகிறார். உடல்நிலையைப்
பொறுத்தவரை இவர் அவ்வளவு சிறப்பான
உடல்நலமுடையவராக
இருக்கவில்லை. செவ்வாய் கிரகக் விளைவாக
இவருக்கு
அவ்வப்போது இரத்தஅழுத்தம் இருந்தது. சூரியன்
12-ஆம் இடத்தில்
அமர்ந்ததால்தான் இவருக்குச் சமயப்பற்று
உண்டாயிற்று.
புதன் இலக்கினத்தில் அமர்ந்ததால், அது
கூர்மையான

புத்தியையும் சிந்தனையையும் அளித்தது.
கர்மஸ்தானமாகிய
பத்தாவது வீட்டில் அமர்ந்த இராகு இவரது
சுறுசுறுப்பையும்
மிக நல்ல உழைப்பையும் சுட்டிக் காட்டுவதாகவும்
உள்ளது.
காந்தியடிகள் அஹிம்சையைப் பெரிதும் போதித்து
வந்தார்.
ஜாதகத்தில் இலக்கினத்தற்கு மூன்றிலுள்ள குரு,
சனியினாலும் செவ்வாயினாலும்
பார்க்கப்பெறுவதாலும்
சந்திராலக்கினத்துக்கு மூன்றில் அமர்ந்துள்ள
செவ்வாயினால்தான், அண்ணல் காந்தியடிகள்
எல்லாவற்றையும்
தியாகஞ் செய்வதில் தனிப்பட்ட மகிழ்ச்சியையும்
ஆனந்தத்தையும் அடைபவராக இருந்தார். அரசியல்,
சமயம், சமூகம்,
இலக்கியம் ஆகிய துறைகளுள் ஏதேனும் ஒன்றில்
ஒருவரைப்
பல்லாயிரக்கணக்கான மக்கள் பின்பற்றுகிறார்கள்
என்றால்
அவரது ஜாதகத்தில் பத்தாவது ஸ்தானத்தில்
ஏதாயினும்
ஒரு முக்கிய கிரகம் சேர்க்கை பெற்றிருக்கும்
அல்லது
பத்தாவது கர்மஸ்தானத்தின்மீது ஏதேனும் ஒரு
முக்கிய
கிரகத்தின் பார்வை பட்டிருக்கவேண்டும். இது

பொதுவான
நிலை. இவரது ஜாதகத்தின் குருபகவான்
சந்திராலக்கினத்துக்குப் பத்தில் இருப்பதும், சனி
பத்தாவது வீட்டைப்
பார்வையிடுவதும் கவனத்துக்குரியது.
-49-
முக்கியமான நிகழ்ச்சிகள்
அண்ணல் காந்தியடிகளின் ஜாதகத்தில் இராகுதசை
தொடங்கியதிலிருந்து தன்னாட்சி உரிமைப்
போராட்டத்தில் பங்குகொள்ளத் தொடங்கினார்.
இவரது
ஜாதகத்தில் ஜன்மலக்கினத்துக்கு 10-ஆமிடத்திலும்
சந்திரா
லக்கினத்திற்கு 12-ஆமிடத்திலும் இராகு
அமைந்துள்ளது.
12-ஆம் வீடு விரையங்கள், சிறைகள், பாதாளச்
சிறைகள்
போன்றவைகளையும் குறிப்பாகவும் 10-ஆம் வீடு
கரம்
ஸ்தானத்தையும் அரசு செல்வாக்கையும்
ஜீவனத்தையும்
குறிப்பதாகும். இராகுதசை இராகு புத்தியில்
காந்தியடிகள்,
ஒத்துழையாமை இயக்கத்தில் பங்குகொண்டதால்
கைது
செய்யப்பெற்று, குருபுத்தியில் விடுதலை
செய்யப்பெற்றார்.
இராகுதசை கேதுபுத்தியில் மீண்டும் அதே

ஒத்துழையாமை
இயக்கத்தை மக்களின் பேராதரவோடு நடத்தியதால்,
இவர்
1942-ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.
அப்போது இவரது
குருதசையில் புதன் புத்தி நிகழந்துகொண்டிருந்த
காலமாகும்.
குருதசை சுக்கிரபுத்தியில், காந்திஜி அவர்கள் நீண்ட
நாள் கனவு கொண்டிருந்த இந்திய விடுதலை
நனவாகியது,
ஆனால், அத்தகைய இந்திய விடுதலை அவர்
மனத்திற்கு
மகிழ்ச்சியைத் தரவில்லை. பாகிஸ்தான்
பிரவினையால்
நாட்டில் விளைந்த கடுமையான தீய விளைவுகளால்
தேசத்தின்
பல இலட்ச மக்கள் பாதிக்கப்பட்டனர். என்றாலும்
அண்ணல் காந்தியடிகள் மிகத்தீவிரமான
சத்தியாக்கிரகம்,
உண்ணாவிரதம், கால்நடைப்பயணம், யாத்திரை
ஆகியவற்றின் மூலம் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு
கண்டார்.
அப்போது நடந்த தசாபுத்தி நாயகர்களான குரு,
சுக்கிர
கிரகங்கள் செவ்வாயின் தொடர்பையும் குரு,
செவ்வாய்
சனியின் பார்வையையும் பெற்றிருந்தனர். இவரது
ஜாதகத்தில் குருதசையினால் சூரிய புத்தி நிகழ்ந்து

வந்த காலத்தில்
தான் இவர் நாதுராம் கோட்ஸே என்பவனால்
துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தார். அப்போது
தசாநாயகராகிய
குரு, ஜாதகத்தில் அஷ்டமஸ்தானத்தில்
அமைந்திருந்த
-50-
நிலையில் செவ்வாயினால் வலிமையாகப்
பார்க்கப்பெற்று
அவனே மாரகத்தைச்செய்தான். அதுபோல
சந்திராலக்கினத்துக்கு 2-லும், ஜென்ம
இலக்கினத்திற்கு 12-லும் அமர்ந்த
மாரகஞ்செய்யும் சூரியனும் அமர்ந்த காலத்தில்தான்
இவர்
துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தார். அகிம்சையின்
தூதுவராகத் திகழ்ந்த அண்ணல் காந்தியடிகள்
துப்பாக்கியினால்
சுடப்பட்டு இறந்தது மாபெருந் தியாகமாயிற்று.
துலாலக்கினம், செவ்வாய், புதன், சுக்கிரன்
ஆகியவற்றுடன் சேர்க்கை பெற்று அமர்ந்துள்ளது.
துலா இராசியின்
சின்னம் திராசுக் கோலாகும். சந்திரன் இரு
பாதகர்களுக்கு
இடையில் அமர்ந்துள்ளதையும் ஆன்மாவை ஆட்சி
செய்யும்
சூரியன் 12-ஆமிடமாகிய மோட்ச ஸ்தானத்தில்
அமர்ந்து
குருவினால் வலிமையாகப் பார்க்கப்பெறுவதையும்

கவனிக்கவும். இத்தகைய கிரக அமைப்பினால்தான் அண்ணல்
காந்தியடிகள் சத்தியம், அகிம்சை, பிரம்மசரியம் ஆகிய
மூன்று முக்கிய சீலங்களை உலக மக்களுக்குப் போதிப்பவராகவும், அவற்றின்படி வாழ்ந்து காட்டுபவராகவும்
விளங்கினார். உண்மையும் வாய்மையுமான சத்தியத்தை இவர்
பெரிதும் மதித்துவந்ததால்தான், சத்தியாக்கிரக இயக்கத்தை
மிகவும் தீவிரமாக நடத்தி வந்தார். ஆன்மசக்தியின் வலிமையை வளர்ப்பதுதான் சத்தியம் என்றும், சத்தியாக்கிரகம் என்பது ஆன்ம சக்திக்கான நடவடிக்கை என் றும்
காந்தியடிகள் குறிப்பிட்டு வந்தார்.

பிரம்மசரியம் என்னும் புலனடக்கத்தின் மூலம் மனிதனது ஆன்மிக சக்தி வலிமை பெறுவதாகவும் தெய்விக
சக்திகள் தோன்றுவதாகவும் அவர் கூறியதுடன் தாமும்
அவ்வாறு வாழ்ந்து காட்டியதால்தான் அனைத்து நாடுகளிலும் இவருக்கு மதிப் பும் மரியாதையும் உண்டாயின.

இவற்றிற்கெல்லாம் மேலாக இவர் எளிமையான, தூய்மையான, ஆன்மிக சக்திக்குரிய வகையில் வாழ்ந்து இந்திய
மக்களின் விடுதலைப் போராட்டத்தில் அகிம்சையின்

மூலமே
இந்திய விடுதலையைப் பெற்றுத் தந்ததால் இவரை `இந்திய
நாட்டுத் தந்தை' என உலகமே மதிக்கலாயிற்று.

-51-

மொரார்ஜி தேசாய்

இவர் மன்மத வருஷம் மாசி மாதம் 19-ஆம் தேதி (29-8-1896) சனிக்கிழமையன்று பிறந்தார். இவரது பிறந்த
நாள் ஜாதகம் பின்வருமாறு:

இவரது ஜன்மலக்கினம், மிதுனம்: ஜன்ம நட்சத்திரம், பூரம்; ஜன்ம இராஜி, சிம்மம்.

-52-

இவரது பிறந்த காலத்தில் தாயின் கர்ப்பச் செல்லு போக இருப்பு சுக்கிரதசை இருப்பு 13 வருஷங்கள், 11
மாதங்கள், 23 நாள்கள்.

தற்போது இவருக்கு சனிதசையில் செவ்வாய் புத்தி நிகழ்கிறது. இது 1981 - 10-10 அன்று முடிகிறது. அதற்குப்
பிறகு இராகுபுத்தி 2 வருஷம், 10 மாதம் 6 நாள்கள்.

இவரது ஜன்மலக்கினமாகிய மிதுனத்திற்கு அதிபதி புதன். இலக்கினத்துக்கு 1 - 4க்கு உரியவன். இந்த இரண்டு
வீடுகளில் எங்கு அமர்ந்த போதிலும் கேந்திராதிபத்திய
தோஷம் உண்டு. இவருக்கு 8-ல் புதன்
அஷ்டமத்தில்!

புதனுக்கு கன்னி வீட்டில் உச்சபலம் உண்டு.
தற்போது
இவருக்குச் சனிதசையில் செவ்வாய் புத்தி நிகழ்ந்து
வருகிறது; திரு. மொரார்ஜி தேசாய் அவர்களுடைய
ஜன்ம
லக்கினத்திற்குச் சனிபகவான் அஷ்டம
பாக்கியாதிபதியாகும். அஷ்டம் ஆதிபத்தியம்
பெற்றதாலேயே தீய பயன்.
அதே சமயம் பாக்கியாதிபதியாகவும் இருந்ததால்
பாக்கியத்தையும் தந்தார்; தருவார். அதனால்தான்
இவர் உயிருக்கே
ஆபத்தான விபத்துகள் நிகழ்ந்துங்கூட இவர்
மட்டுமே
உயிர் தப்ப முடிந்தது.
மிதுன இலக்கினத்துக்கு 7-10-க்கு உரியவன்
வியாழன்.
எனவே, இவர் கேந்திராதிபத்திய தோஷத்தைப்
பெற்றவராகிறார். மேலும் இலக்கினாதிபதிக்குப்
பகையாக
இருப்பதால் மாரக ஆதிபத்திய பலனைக்
கொடுக்கலாம். நல்ல
ஸ்தானங்களில் வலுப்பெற்று இருந்தால் யோக
பலனைக்
கொடுப்பார். இவருக்கு, குரு வாக்கு ஸ்தானத்தில்
உச்சம் பெற்றிருக்கிறபடியால் இவர் தனயோகத்துடன்
வாழ்ந்து வருகிறார்.
இவரது ஜாதகத்தில் இலக்கினத்திற்கு 5-12-க்கு உரிய
சுக்கிரன் 5-ஆவது ஆதிபத்யம் பெற்றபடியால்

சுக்கிரன்
இவருக்கு சோககாரகன். இலக்கினாதிபதி புதனுக்கு நட்புக்
கிரகமாக இருப்பதால் எந்த இல்லத்தில் அமர்ந்துள்ள போதிலும் பொதுவில் நன்மையைச்
செய்யக்கூடியவன்.



சுக்கிரன் இவரது இலக்கினத்துக்கு யோககாரகனாகப் புதனுடன் சேர்ந்திருப்பதே ஓர் இராஜயோகமாகும். அதிலும் உச்சம் பெற்ற செவ்வாயும் அந்த வீட்டுக்கு வலிமையாகக் காணப்படுவதால், பிரபு ஸ்தானமாகிய 5-ல் சனியும்
பரிவர்த்தனை பலத்தை வலியுறுத்த, உச்சம் பெற்றதும்
மிகச்சிறந்த இராஜயோக ஜாதகம் என்பதைத் தெளிவு படுத்துகிறது. சனீஸ்வரன், ஆயுள்காரகனாகையாலும் அவர்
5-ஆமிடத்துப் பூர்வபுண்ணிய பலத்தைப் பெற்றதாலும்
பிடிவாத குணமும் முயன்றன முடிக்கும் சுபாவமும் இவருக்கு
இயல்புக்குணமாயின.

இவரது இலக்கினத்துக்கு 6-11-க்குரியவனாக இருந்து புதனுக்குச் சம கோளாகச் செவ்வாய் இருந்த போதிலும்,
இந்த இலக்கினத்துக்குத் தீய பயனையே தருவார் என்பது
தெளிவு. நோய், பகை, கடன்கள் ஆகியவைகளைக்

கொடுப்பார். காரணம், மகா பாரக ராசிக்குச்
செவ்வாய்
அதிபதியாக இருப்பதாகும். ஆயினும், திரு.
மொரார்ஜி
அவர்களுக்குச் சனிபகவான் துலாத்தில் உச்சம்
பெற்றிருக்கிறார்.
தற்போது நாலில் இருக்கிறார். இயல்பாகக் கடகத்தில்
வலிமை மிக்கவராய் இருக்கும். குரு, இப்போது
இலக்கினத்துக்கு 4-ல் இருக்கிறார். எனவே, சனியும்
குருவுமே
அர்த்தாஷ்டம தோஷத்திலிருக்கின்றனர். சுக்கிரன்
சனி
பரிவர்த்தனை சனிபகவான், கோச்சார ரீதியாகத்
துலாம் வீட்டில்
உச்சம் பெறும். இவரது ஜாதகத்தில்
பூர்வபுண்ணியத்திலுள்ள சனிபகவானும்
இலக்கினத்திற்கு ஐந்திற்கு
மாறாமலிருக்கும் குருவும் நற்பயன்களைச்
செய்யத்தான் வேண்டும்.
மேலும் ஏழரை நாட்டுச் ஜன்மச் சனியில் பதவியை
இழந்து, பாதச்சனியினாலும் அர்த்தாஷ்டமச்
சனியினாலும்
அவதிப்பட்ட இவருக்கு சனிதிசையில் பாக்கிய
ஸ்தானத்திலுள்ள சூரியனும் இராகுவும் எதிர்பாராத
இராஜயோகத்தைத் திரும்பவும் அளிக் கக்கூடும்.
ஆயினும்
செவ்வாய் புத்தியாகவும் செவ்வாய் ஆயுள்காரகன்

வீட்டிலிருப்பதுதான் யோசிக்கத்தக்கது. எமன் வழக்கம் போல
ஏமாந்தால், இவர் மீண்டும் உயர்ந்ததொரு பதவியை அடையக்கூடும். காலம் முடிவு செய்வதை, எந்த ஜனநாயக
முறையினாலும் முடிவுகளாலும் மாற்ற முடியாது!

இவர் ஜன்ம ஜாதகப்படி இவருக்கு பேரும் புகழும் இருக்கும் போதே, இவரது ஆயுள் முடிந்துவிடும்.

-55-

செவ்வாய்

இவரது ஜன்ம இலக்கினத்துக்கு 6.11-க்கு உரியவனாக
இருந்து புதனுக்குச் சமகோளாக இருந்த போதிலும் இந்த இலக்கினத்துக்குத் தீய பயனையே செய்வான் என்பதில்
சந்தேகமில்லை. ஆயினும் எமன் ஏமாந்தால் இவர் மீண்டும்
உயர்நிலையை அடைய மார்க்கமுண்டு. ஆனால் அதற்குள்
மாரகம் ஏற்படாமல் இருக்க வேண்டுமே!

-56-

இரவீந்திரநாத் தாகூர்

பிறவிக் குறிப்புகள்

இரவீந்திரநாத் தாகூர் 1861 - ஆம் ஆண்டு மே மாதம்
7-ஆம் தேதி, காலை 2-51 மணிக்குத் தோன்றினார்.

சிறப்பு அமிசங்கள்

இரவீந்திரநாத் தாகூர், பாரத தேசத்தின் மிகச்சிறந்த

கவிஞராகவும், நோபெல் பரிசு பெற்ற புகழுக்கு
உரியவராகவும், சாந்திநிகேதன் என்னும் அமைதிச்
சூழ்நிலைக் கல்வி
நிறுவன அமைப்பாளராகவும் விளங்கியதற்கு,
இவரது
ஜாதகத்தில் அமைந்துள்ள பரிவர்த்தனை யோகமே
காரணமாகும். பூர்வ புண்ணியாதிபதியும்
இலக்கினாதிபதியும்
பரிவர்த்தனை, அதாவது குருவும் சந்திரனும்
ஒருவருக்குரிய
இடத்தில் மற்றவர் மாற்யிருப்பதேயாகும். மேலும் 5-
ஆம்
இடத்தில் குரு மிகவும் உயர்வுற்றவராக
அமைந்துள்ளதும்
கவனிக்கத்தக்கது குரு, சந்திரன் வீட்டிலும், சந்திரன்
குரு



வீட்டிலும் அமர்ந்ததாலேயே இவர் கற்பனைவளமும்
கவிதை
நயமும், இயற்கையழகை இரசிக்கும் இரசனையும்
கொண்டவராய்த் திகழ்ந்தார். வாக்கு ஸ்தானத்தில்
புதனும் சுக்கிரனும்
அமையப்பெற்றதால், இவர் வாயைத் திறந்து
பேசியனவெல்லாம் கவிதையாகவும் கருத்து
நுட்பமிகுந்த கற்பனை
வளமிக்க சொல்லாட்சியுடையனவாகவும்
திகழலாயின.
இரவீந்திரநாத் தாகூர் சிறந்த கவிஞர் மட்டுமல்ல,

வண்ண
ஓவியருங்கூடி; அரசியல் ஞானி; தத்துவமேதை.
இரவீந்திரநாத் தாகூரின் கவிதைகள் உயிரோட்டம்
உள்ளனவாகவும் அழகுமிக்க சொல், நடை,
ஆழமான
கருத்து ஆகியவை கொண்டனவாகவும் திகழ்ந்தன.
இவர்
ஜாதகத்தில் சந்திரன் இலக்கினத்தில் வீற்றிருப்பதாலும்
சூரியன் 2-ஆமிடத்திலும் வீற்றிருப்பதாலும் இவர்
அரசியலில்
சிறந்து விளங்க வேண்டியவர். என்றாலும்,
நவாம்சத்தில்
சூரியன் இராகுவுடனும் சுக்கிரனுடனும்
அமையப்பெற்றதால்
தான், இவர் அரசியல் முக்கியத்துவம் பெறவில்லை.
ஆயினும்,
இத்தகைய கிரகச் சேர்க்கையின் விளைவினால்,
இனரீதியான,
சமூகவியல் ரீதியான விஷயங்களிலும் இவரது
கவனம்
திரும்பியது.
7-ஆம் ஸ்தானாதிபதி 2-ல் ஆறுக்குரிய
சூரியனுடனும்
3-8-க்குரிய சுக்கிரனுடனும் சேர்ந்து அமைந்துள்ளது.
குடும்பத்தைப் பொறுத்தவரை, கவியரசருக்கு
மகிழ்ச்சியிருக்கவில்லை. இவர் மனைவியும்
குழந்தைகளும் இறந்தது,
இவருக்குத் துக்கத்தைத் தந்தது. பிறந்த ஐந்து

குழந்தைகளில் இருவரே பிழைத்தனர். கவியரசர் பிறந்த குடும்பம்
புனிதமான குடும்பமாக அமைந்ததால் இவர் கவிதைத்துறையில் மிகவும் புகழ் பெற்றுத் திகழ முடிந்தது. இவரது
ஜாதகத்தில் பர்வத யோகமும் சாமா யோகமும் அமைந்துள்ளன.
இலக்கினாதிபதியான குருவும் வித்யா ஸ்தானாதிபதியான
புதனும் பரஸ்பர கேந்திர ஸ்தானங்களில் பரிவர்த்தனை
யோகம் பெற்று, குரு, சந்திரன் ஆகிய கிரகங்கள் நல்ல



நிலையில் அமையப்பெற்றதால் இவரது கைவண்ணக் காவியங்கள் அகில உலகப் புகழைப் பெறக்கூடிய தகுதியைப்
பெற்றன.

சரஸ்வதி யோகம் அமையப்பெற்றதால்தான் கலியரசர்
இரவீந்திரநாத் தாகூர் தம் வாழ்வின் பிறபகுதியில் மிகவும்
புகழ் பெற்றுத் திகழும் `கீதாஞ்சலி' என்னும் இலக்கியப்
படைப்பினையும் வழங்க முடிந்தது.

முக்கியமான நிகழ்ச்சிகள்

இலக்ினத்திற்கு 4-ஆமிடத்தில் அமைந்துள்ள கேது

மாத்ருகாரகனுக்கு 4-லும் அமைந்ததால் இவர் தாயார், இவரது கேது திசையில் மரித்தார்.
இவர் தமது 18-வது வயதில் முதன் முறையாக ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்தபோது, இவரது
ஜ ாதகத்தில் கேது திசை சனிபுத்தி நிகழ்ந்தது. சுக்கிரதசை சந்திர
புத்தியில் இவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. சூரியதசை குரு
புத்தியில் இவர் சாந்தநிகேதன் என்னும் ஸ்தாபனத்தைப்
பூங்கா பல்கலைக் கழகமாக அமைத்தார். சூரியதசை சனி
புத்தியில், இவர் மனைவி இறந்தார். ஜாதகத்தில் 7-ஆம்
வீட்டுக்கு சூரியன் விரைய ஸ்தானத்திலும், 7-ஆம் வீட்டிலிருந்து விரைய வீட்டில் சனி அமையப்பெற்றதாலும் இந்த
நிகழ்ச்சி நிகழ்ந்தது. சந்திர தசை சந்திர புத்தியில், இவர்
தமது தந்தையை இழந்தார். (பித்ருகாரகனுக்கு 2-ல் சந்திரன்).
1913-ஆம் ஆண்டு, இரவீந்திரநாத் தாகூர், உலகப் புகழ்
பெற்ற நோபெல் பரிசைப் பெற்றார். இது இவரது ஜாதகத்தில் சந்திரதசையில் சுக்கிரபுத்தி நடந்தபோது நிகழ்ந்தது.
சந்திரன் பூர்வபுண்ணியத்துக்குரியவனாக இருந்தும்

இலக்கினத்திலேயே அமர்ந்து புகழுக்குரிய 10-வது வீட்டுக்குரிய உச்சம்
பெற்ற குருவினால் பார்க்கப்பெற்றதாலேயும், கவிதைக்குரிய
சுக்கிரன், புதனுடனும், சூரியனுடனும் சம்பந்தம் பெற் தாலுமே,
-60-
கவியரசருக்கு உலகப் புகழுக்கும் பாராட்டுக்கும் உரிய நோபெல் பரிசு கிடைத்தது.

இராகு பன்னிரண்டாம் வீட்டிலிருப்பதைக் கவனிக்கவும். இராகு தசை தொடங்கியவுடனேயே கவியரசருக்கு
ஆண்டுதோறும் கிராம புனரமைப்புத் தொண்டிற்காக ரூபாய் ஐயாயிரம் கிடைக்கலாயிற்று. அதே இராகு தசையில்தான் கவியரசர் தாகூர், இரண்டாவது முறையாக
ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய கடல் கடந்த
நாடுகளுக்குச் சென்றார். அந்த நாடுகளிலுள்ள சிறந்த சிந்தனையாளர்களையும் கவிஞர்களையும் இராஜதந்திரிகளையும்
சந்தித்தார்.

கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் அவரது தத்துவக்
கோட்பாட்டுக் கொள்கையைப் பரப்பும் வகையில் `விஸ்வ
பாரதி' பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தார். குருதசை

சுயபுத்தியில் இத்தகைய அரிய வாய்ப்பு அமைந்தது. இந்தக்
காலத்தில்தான் கவியரசரின் கற்பனைகள் ஆற்று வெள்ளம்
போலப் பெருக்கெடுத்து, புகழ் பெறத்தக்க கவிதைகளையும்
கருத்தோவியங்களையும் உலகிற்கு வழங்கின.

இவர் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையில் இருந்த
காலத்திலுங்கூட, கவிதைகளை எழுதினார். சுயசரிதத்தை ஒரு
சிறிய வாழ்க்கை வரலாறாக எழுதி முடித்தார். இவர் குரு
தசை குரு புத்தியிலேயே மரணமுற்றார். பொதுவாக,
குருவே இலக்கினாதிபதியாக இருக்கும் போது மாரகத்தை
வழங்குவதில்லை. ஆனால், இவரது ஜாதகத்தில் குரு புதனுடன்
கிரகசாரத்தில் அமைந்ததாலும் புதன் மாரகஞ் செய்பவராக
இருந்தாலுந்தான், இவர் மரணமீடைய நேரிட்டது.

முக்கிய அமிசங்கள்

தாகூரின் ஜாதகத்தில் புதன், குரு, சுக்கிரன், சூரியன்
ஆகிய கிரகங்களின் காரகத்துவச் செயலாற்றலைக் காணலாம்.
உணர்ச்சிகளுக்கும் வித்தைகளுக்கும் உரிய புதனும் தத்துவக்

கிரகமான குருவும், கவிதைக்குரிய சுக்கிரனும், அரசியல்
கிரகமான சூரியனும் கவனிக்கத்தக்கவை. சந்திரன் நவாம்சத்தில் குருவுக்கு 11-ஆம் இடத்தில் அமையப்பெற்றதாலேயே இவர் உலகப் புகழ் பெற்ற கவிஞராக உயர முடிந்தது.
இலக்கினாதிபதி குரு திரிகோணத்திலும் பர்வத யோகத்திலும்
இருந்ததால்தான், இரவீந்திரநாத் தாகூர், உலகம் முழுவதும்
மதிக்கத்தக்க உலகப் புகழ்பெற்ற கவியரசராகத் திகழ முடிந்தது. குருவின் அமைப்பும், ஜாதகத்தில் பாரிஜாத
சரஸ்வதி யோகங்கள் ஆகிய இரண்டுமே அமையப்பெற்றதால்தான், கவியரசர் இரவீந்திரநாத் தாகூரால் உலக
நாடுகள் யாவற்றாலும் போற்றத்தக்க புகழையும், அவர்
வாழ்வின் அழியாத அமரச் சின்னமாக விளங்கும் சாந்திநிகேதனத்தையும் விஸ்வபந்து பல்கலைக் கழகத்தையும்
அமைக்க முடிந்தது. ஒழுக்கத்தாலும் உயர்ந்த மதிப்புக்குரிய குணச்சிறப்புகளாலும் சிறப்புற்று விளங்கிய
இரவீந்திரநாத் தாகூர், மற்ற கவிஞர்களுக்கு ஓர் ஒளிவிளக்கைப்
போன்றவர்.